
# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

15-10-66



வேந்தனார் ஞாபகார்த்த இதழ்

கலை, இலக்கிய மாத இதழ்

விலை சதம் 30

தொலைபேசி: 537

# பாலா பிரதர்ஸ்

தீவுப்பகுதியில்

தலைசிறந்த வர்த்தக ஸ்தாபனம்

குறைந்த விலையில் நிறைந்த பொருட்களும்
வாடிக்கைக்காரர்களால் வளம்பெற்ற ஸ்தாபனமும்
இதுவே!

பட்டுப் பருத்திச் சேலைகள்
கைத்தறிச் சேலைகள்
றெடிமேட் உடைகள்
பரிசுப் பொருட்கள்
முடிமயிர்

மற்றும்

பாட்டா பாத அணிகள்
லக்ஸபான பாட்டரிகள்
அரசாங்க பதிப்பக பாடசாலைப் புத்தகங்கள்
கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திகள்
பொலிடோல் மற்றும் கிருமிநாசினிகளும்

கண்ணாடி, அலுமேனியப் பாத்திரங்கள்
தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள்
சைக்கிள்,
கைக் கடிகாரங்கள்
மரக்கறிவிதைகள்

பெற்றுக்கொள்ளலாம்.

# BALA BROTHERS

KAYTS.

## மல்லிகை

ஆக்கவேலைகளில் சேர்ந்து உழைப்பதினால் விளையும் பரஸ்பர நம்பிக்கையானது, உண்மையான நல்லெண்ணத்தையும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய நல்ல சூழ்நிலையையும் உருவாக்குகின்றது.

# பாவலன்பேர் பரப்புவோமே!

செந்தமிழின் தேன் பொதிவாய்
 திணவெடுத்த திண்டோள்கள் திரண்டமார்பு
சந்ததமும் தமிழ் வாழத்
 தலைப்பெய்திப் பணிபுரியும் தகைமையுள்ளம்
முந்துமவைத் தமிழ்ப் பேச்சில்
 முன்னெவரும் இல்லாத முதல்வோய் வேந்த
வெந்தழலும் தமிழ்ச் சுவையை
 விரும்பியுணக் கொடுத்திங்குவெந்தாயன்றோ!

சிலம் புரைத்த கோவினுளம்
 சீதை கதைக் கம்பனது திறமும் ஓர்ந்து
நலந்தேர்ந்து ஆய்ந்து உமை
 நண்ணி வருசுவை ஞர்கட்கு அளித்து இன்பப்
புலந்தேர்ந்த தமிழ் மழலைப்
 புன்னகை வாய் மெல்லிசையில் அம்மாவின்பா
மனங்கூட்ட, வாழ்ந்தநினை
 மறந்திடா திவ்வுலகம் மதித்துப் போற்றும்.

செந்தமிழின் உயிர் மூச்சு
 தீம்புலவர் திறவாய்ந்து பேசும் செந்நா
கந்தனருட் கேங்கி நிதம்
 கனியாகும் பேரிதயக் கருணைநெஞ்சு
சுந்தரநல் எழில் உருவம்
 தோன்றிய நல்நாட்டுயர்வில் தோய்ந்த அன்பும்
பந்தமுள்ள நாகேந்திரம் பிள்ளை என்ற
 பாவலன் க. வேந்தன்பேர் பரப்புவோமே!

— தில்லைச்சிவன்

மல்லிகையில் வெளியாகும் கதைகள் அனைத்தும் கற்பனையே. எழுதியவர்களே கருத்துக்கும் கற்பனைக்கும் பொறுப்பு.

# உங்கள் கருத்து

மல்லிகை இதழ்கள் இரண்டையும் இப்போதான் பார்வையிட்டேன். தரமானவைகள். செப்டம்பர் இதழின் தலையங்கம் மிகவும் சிறந்தது. நம் நாட்டு மக்களனைவரும் இவ்வுண்மையை மிக விரைவில் உணர்ந்து முடிவுகளைக் கொடுப்பார்கள்.

— எ. இக்பால்

மல்லிகை இரண்டும் பார்த்தேன். மகிழ்வுடன் திருப்தியும் அளிக்கின்றது. ஜனரஞ்சகத்திற்கு எத்தனையோ ஏடுகள் இருக்கின்றன. ஆகவே மல்லிகை இலக்கியக் கனம் உள்ளதாக இருக்கட்டும்.

— தெளிவத்தை ஜோசப்

செப்டம்பர் இதழின் 35-ம் பக்கத்தில் திரு. செ. கணேசலிங்கத்தை மட்டும் நண்பர் என்று குறிப்பிட்டதால், மற்றவர்களை மல்லிகையின் சகோதரராக்கிவிட்டீர்கள்.

— 'நந்தி'

மல்லிகை இரண்டையும் பார்த்தபின்னர் இதை எழுதாமல் இருக்க முடியவில்லை. செப்டெம்பர் இதழின் தலையங்கம் சிந்தனைக்குரியது; பாராட்டுக்குரியது.

— சிவா சந்திரன்

முதல்—இரண்டு இதழ்களும் கிடைக்கப் பெற்றேன். முதல் இதழில் அரியம் அவர்களின் கட்டுரை புதிய சிந்தனையை ஊட்டியது. இரண்டாவது இதழின் தலையங்கம் மிகச்சிறப்பாக இருந்தது இப்படியான தலையங்கங்கள் இதுவரை இலங்கையில் வேறு எந்தச் சஞ்சிகைகளுமே எழுதவில்லை.

— எஸ். தியாகராஜா

ஈழத்தில் மலரும் ஓர் இலக்கிய சஞ்சிகையில் எனது கதை வெளியாகியதில் மிக்க மகிழ்ச்சி. எனது முதற் கதையைப் பிரசுரித்த உங்களுக்கு எனது நன்றிகள்.

— சி. நாகேஸ்வரி

மல்லிகை மென்மேலும் வளம் பெற்று, இலக்கியத் தொண்டாற்ற வேண்டும் என்பது எனது பேரவா. மல்லிகை நடுநிலை நின்று இலக்கிய வளம்பெற எனது வாழ்த்துக்கள்.

— தி. நித்தியானந்தன்

ரசிகமணியின் கதை மனதைத் தொட்டது. செப்டம்பர் தலையங்கம் இந்த நாட்டுச் சிந்தனையாளர்களுக்குப் பெருவிருந்து. இதழுக்கு இதழ் இப்படியான தலையங்கள் உங்களது பேனுவிலிருந்து உருவாகும் என எதிர்பார்க்கின்றேன். அது ஒன்றே போதும்.

— வி. விவேகானந்தராசா

செப்டம்பர் இதழ் ஆசிரியர் தலையங்கம் 'தலைக்கன' முள்ள ஜீவாவை மேலும் தலைநிமிர்த்தச் செய்கின்றது. அழகுக்கு அழகூட்டுவது போல, இரசிகமணியின் 'அன்பளிப்பு' என்ற கதை ரசித்து அனுபவிக்கும்படியாக இருக்கிறது மல்லிகையின் இதழ் ஒவ்வொன்றுமே நறுமணம் கமழட்டும்.

க. துளசிகாமணி

ஒதுங்கிப்போன பிரபல எழுத்தாளர்களின் படைப்புகளைத் தவிர்த்து புதிய எழுத்தாளர்களின் சிருஷ்டிகளை மல்லிகையில் வெளியிடுங்கள். வாடிப்போன மலர்கள் வேண்டாம். புதிய மலர்களே வேண்டும்.

— சி. சுதந்திரராஜா

இன்றுகூட, குட்டுபவனுக்குத் தலைகுனிந்து கொடுக்கும் சில மர மண்டையர்கள் நம்மிடமும் உண்டு. மணி கிலுக்கும் விழாக்கள் அதற்குச் சான்று. செப்டெம்பர் தலையங்கம், நமது தலையிலேயே மிளகாய் அரைக்க முயற்சிக்கும் சந்தர்ப்பவாதக் கும்பலுக்கு சாட்டையடி.

எம். எஸ். எம். முகம்மது

புதுப் புது அம்சங்கள் தொடரவேண்டும். செப்டம்பர் தலையங்கத்தைப் போன்ற தர்க்கரீதியான தலையங்கங்கள் அடிக்கடி மல்லிகையை அலங்கரிக்க வேண்டும். விமான நிலையத்திலிருந்து நிலபாவாடை விரித்து வரவேற்கும் கூட்டம் சிந்திக்கட்டும்.

த. மகேந்திரன்

''ஆடுதல் பாடுதல் சித்திரம் — கவி
யாதியினைய கலைகளில் — உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் — பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்''

கொடி 1. | ஒக்டோபர் 15 1966 | மலர் 3.

# நம்மவர்களை நாமே மதிக்கவேண்டும் — நாமே நம்மவர்களை மனப் பூர்வமாகப் பாராட்டவும் வேண்டும்!

ஈழத்தில் இன்று ஒரு புதிய மாற்றம் கலாச்சார அடிப்படையிலும் கலை இலக்கிய ரீதியாகவும் மிகத் துரிதமாக ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது.

நீண்ட நெடுங்காலமாக நமது கலை இலக்கியப் படைப்பாளிகள், நடிகர்கள், நாடக ஆசிரியர்கள், ஓவியர்கள், பாடகர்கள், நடனத்துறை வல்லுநர்கள் எந்த நோக்கத்திற்காக உழைத்தார்களோ அந்த உழைப்பின் அறுவடையாக நல்ல சூழ்நிலை ஒன்று இன்று நமது இலங்கைத் திருநாட்டில் மெல்ல மெல்ல, ஆனால் திட்டவட்டமாக உருவாகிக்கொண்டு வருகின்றது.

இம் மாறுதல் மாபெரிய வெற்றி! — நல்ல சகுனம்!

இன்று நமது நாட்டின் பல பகுதிகளிலும் அரங்கேற்றப்படும் நமது நாடகங்கள் எங்களது மக்கள் மத்தியிலேயே திரும்பத் திரும்ப நடித்துக் காட்டப்படுகின்றன.

திறமான தொழில் நுட்ப வசதிகளோ, வசதியான மேடை அமைப்புக்களோ வாய்க்கப் பெற்றிராத இவர்கள் வெறும் ஆர்வம் ஒன்றையே முதலாகவும் மூலதனமாகவும் வைத்துத் தங்களது கலைத்திறமையைக் காட்டுவதுடன் ஐம்பதாவது வெள்ளிவிழாக் கொண்டாடக் கூடிய ஒரு புதிய

சகாப்தத்திற்கு அத்திவார மிட்டு வருகின்றனர். இதன் பரிணும வளர்ச்சிதான் நமது கலைஞர்களினுல் இங்கு தயாரிக்கப் பட்டு இன்று வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் சினிமாப் படம்.

இந்தச் சாதனைக்கு பசளையாகவும் வித்தாகவும் இருந்தவர்கள் யார்? எங்கள் நாட்டு மக்கள்; உண்மையான ரஸிகர்கள்; எங்களது சகோதரர்கள்!

தங்களது படைப்புக்களை நூல் உருவில் வெளியிட்டால் 'மக்கள் அதை வாங்கி ஆதரிப்பார்களா? லாபம் வேண்டாம்; நட்டம் இல்லாமல் இருக்குமா?' என்று ஏங்கிக் கொண்டிருந்தான் இந்நாட்டுச் சிருஷ்டி கர்த்தா! மாருகக் கடல் கடந்து எந்தச் சாக்கடைக் குப்பை வந்தாலும் சுடச் சுட விற்கப்படுவதையும் கண்டான். மனம் பொறுக்காமல் நாற்சந்தி முனைகளிலும் நடுத் தெருக்களிலும் நண்பர்களைச் சந்தித்த பொழுதும் தனது வயிற்றெரிச்சலைச் சொல்லிச் சொல்லி அழுதவன், துணிந்து, மக்கள் கூடும் சபைகளிலும், இலக்கிய விழாக்களிலும் கருத்தரங்குகளிலும் சொல்லத் தொடங்கினுன்.

மக்களிடம் ஒரு சிந்தனைத் திருப்பம் தோன்றியது.

கடந்த பத்து ஆண்டுகளில், சிறுகதை நாவல், கவிதை நாடக, விஞ்ஞான மற்றும் பல துறைகள் சம்பந்தப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட புத்தகங்கள் எமது நாட்டு எழுத்தாளர்களால் நூலுருவில் வெளியிடப்பட்டு இன்று வெற்றிகரமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

இந்த மாற்றத்திற்கு அத்திவாரமாக அமைந்தவர்கள் யார்?

மக்கள்; நமது நாட்டை நேசிக்கும் நமது சகோதரர்கள்!

மற்றும் புதிய சஞ்சிகைகள் வெளிவரவும், கலை இலக்கிய விழாக்களையும், தமிழ் விழாக்களையும், நாடக விழாக்களையும் மாவட்டத்திற்கு மாவட்டம் ஒழுங்கு செய்வதுடன்

அதை ரஸித்து ஊக்குவிப்பவர்களும் அவற்றை விமர்சித்து குறை நிறை சொல்பவர்களும் இவர்கள்தான்!— இந்த ரஸிகப் பெருமக்களேதான்!

நமது நாட்டுக் கலை, இலக்கிய, கலாச்சார, பண்பாட்டு வளர்ச்சிக்கு இவை மாத்திரம் போதுமா?

முதலில் பாரதியாரைப் பார்ப்போம்.

பாரதியை உலக மகாகவி என முதன் முதல் குரல் கொடுத்தவர் அறிஞர் வ. ரா.

உடனே எதிர்ப்புத் தோன்றியது, தமிழர்களிடமிருந்து. 'கங்கையும் காவிரியும் ஒன்றல்ல நமது காலடியில் காவிரி ஓடுவதால் காவிரியைக் கங்கை எனச் சொல்லமாட்டேன். கங்கை கங்கைதான்; காவிரி காவிரிதான்!' என்று பாரதியைத் தாகூரின் மகாகவி அந்தஸ்திற்கு உயர்த்தக்கூடாது என ஆரம்பத்தில் எழுத்தில் இயக்கம் நடத்தினுர் கல்கி.

வ. ரா. மக்களிடம் சென்ருர். பாரதியை உலக மகாகவி எனப் பட்டிதொட்டி எங்கும் முரசறைந்து பிரகடனப் படுத்தினுர். மக்கள் பாரதியை மகாகவி என ஒப்புக்கொண்டு அங்கீகரித்தனர். அதே மகாகவியை மக்களின் கவி எனவும் ஒப்புக்கொள்ள வைத்தார் தோழர் ப. ஜீவானந்தம்.

மக்கள், பாரதியை மகாகவியாக ஒப்புக்கொண்டதன் பின்னர், காவிரியும் கங்கைதான் என ஒப்புக்கொண்டதுடன் பிராயச்சித்தமாக மகாகவிக்கு மணிமண்டபமும் கட்டி முடித்தார் கல்கி.

நகைச் சுவை நடிகர் என். எஸ். கிருஷ்ணனை வெறும் கூத்தாடி, கோமாளி, பபூன் எனச் சொல்லிவிட்டுச் சிரித்தது தமிழ்நாடு

"இல்லை! என். எஸ். கே. தமிழ் நாட்டுப் பெரியார்களில் ஒருவர்!" எனத் தீர்க்கதரிசனத்துடன் கூறினுர், அதே வ. ரா.

படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், பண்டிதர்கள், சரிகைத் துப்பட்டாக்கள் முகத்தைச் சுளித்தனர்.

தனது வாதத்தை நிலைநிறுத்தி, தமிழ்நாட்டுப் பெரியார்கள் வரிசையிலே அவரை ஒருவராக்கிப் புத்தகம் எழுதி வெளியிட்டார் அறிஞர் வ. ரா.

இன்று தமிழ்நாடு என். எஸ். கேயால் பெருமைப்படுகின்றது. மறுத்தவர்களும் இன்று ஒப்புக்கொள்ளுகின்றனர்.

எம். எஸ். சுப்புலக்ஷ்மியை வெறும் மதுரைப் பாட்டுக்காரி எனத்தான் தமிழகம் ஆரம்ப காலத்தில் எண்ணி இருந்தது. 'எம். எஸ். தமிழ்நாட்டின் இசைவாணி; உலகத்தின் கோகிலம்!' எனச் சொல்லி, 'கர்நாடகம்' என்ற புனைப்பெயரில் பாராட்டினுர் கல்கி. பின்னர் கல்கி அட்டைப் படத்திலும் அவரது படத்தைப் பிரசுரித்துக் கௌரவித்தார்.

அன்று கல்கியின் பேனமுனையால் கௌரவிக்கப்பட்ட கோகிலகான இசைவாணி, இன்று ஐக்கிய நாடுகள் சபையில் தனது கோகிலக் குரலினுல் இசைஅமுதம் பொழிந்து கொண்டிருகின்றது.

இவைகள் சில உதாரணங்கள்.

ஆனுல், எங்களது நிலையோ?

கவிஞன் கவிஞனைப் பாராட்டப் பயப்படுகிறுன். காரணம் பொறுமை. எழுத்தாளன் எழுத்தாளனைப் புகழ விரும்புவதில்லை. காரணம் எரிச்சல். நடிகன் பிறிதொரு நடிகனை மதிக்க அஞ்சுகிறுன். காரணம் மற்றவனைப் பாராட்டினுல் தான் தாழ்ந்துபோய் விடுவேனே என்கின்ற தாழ்வு மனப்பான்மை. பாடகன் இன்னுமொரு பாடகனைத் தட்டிக் கொடுக்கப் பின்நிற்கிறுன். காரணம் தனது தாளம் தவறிப்போய்விடும் என்ற பயம். படித்தவன் படைப்பாளியின் சிருஷ்டிகளைப் படித்து நாலு நல்ல வார்த்தைகள் சொல்லக் கூசுகிறுன். காரணம் தன்னை உலகம் அறிஞன் என என ஒப்புக்கொள்ளாதே என்ற கவலை. பண்டிதன்

புதிய எழுத்தாளனைப் பற்றிப் பேச்சுவந்தாலே சீறிச் சினக்கின்றான். காரணம் ஏதாவது ஒரு நல்லவார்த்தை வாயை விட்டு வந்துவிடுமோ என்ற மனப்பயம்.

இதுதான் இன்றைய நமது நிலை.

இந்த நிலை மாறவேண்டும்; மாற்றப்பட வேண்டும்!

அதற்கு வழி இருக்கிறது.

சிறிது காலமாவது நாம் இதயம் படைத்த மனிதர்களாக விளங்க வேண்டும். பாராட்ட வேண்டும் என்று எது மனதில் படுகின்றதோ அதை அந்த நிமிடமே கூச்சமில்லாமல், ஒளிவு மறைவு இல்லாமல் பாராட்ட வேண்டும் அதில் நாம் மகிழ்ச்சியும் கொள்ளவேண்டும்.

மனம் விரிய விரிய உலகம் நமது உள்ளங்கைக்குள் வந்துவிடும். நெஞ்சு குறுகக் குறுக உலகமும் அகண்டாகாரமாகத் தன்னை விரிவுபடுத்திவிடும்.

அறிஞனை, கவிஞனை, நடிகனை, பாடகனை, நாட்டியக்காரனை, எழுத்தாளனை சுருக்கமாகச் சொன்னால் சமூகத்திற்கும் பயன்படக்கூடிய சகல கலைஞர்களையும் நாம் மனந்திறந்து பாராட்ட வேண்டும். மதித்துக் கௌரவிக்க வேண்டும்.

நிச்சயம் இதற்குச் சீக்கிரம் பலன் கிடைக்கும்.

இப்படிப் பாராட்டினால் சில சுய விளம்பரங்களும், புல்லுருவிகளும், தகர டப்பாக்களும் அல்லவா சமூகத்தினால் அங்கீகரிக்கப்படுவார்கள் என்ற நியாயமான கேள்வி எழலாம்.

ஒன்று மாத்திரம் உண்மை. சரக்கற்றவர்கள், கலை இலக்கிய உலகைத் தமது கீழ்த்தரச் செய்கைகளினாலும் ஆபாசப் பேச்சுக்களினாலும் அசுத்தப் படுத்திக் கொச்சைப்படுத்துபவர்கள், புகழ் காவிகள், கலையின் பேரால் வயிறு வளர்ப்பவர்கள் நீண்டகாலத்துக்குக் கலை உலகில் காலூன்றித் தாக்குப் பிடிக்க மாட்டார்கள். இலை பழுத்துச்

சருகானதின் பின்னர் உதிர்ந்து விடுவதைப்போல, அவர்களது செய்கைகளே அவர்களை அழுக்குக் கூடைக்குள் ஒதுக்கித் தள்ளிவிடும்.

போலிகள், பதர்கள், சந்தர்ப்பவாதிகள் பாராட்டப்பட்டுவிடுவார்களே எனப் பயந்து பயந்து, நல்ல கலைஞர்களைப் பாராட்டத் தவறிவிடுவதிலும் பார்க்க, பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்டிப் பாராட்டியே ஒதுக்கப்பட வேண்டியவர்களைக் காலத்தின் கைகளில் விட்டுவிடுவது மேலல்லவா?

இதைச் செய்யத் தவறினால் சரித்திரம் நம்மை மன்னிக்காது!

இன்று ஒரு சபதமெடுப்போம்.

நம்மவர்களை நாமே மதிக்கப் பழகுவோம்; அவர்களை மனப்பூர்வமாக நாமே பாராட்டவும் செய்வோம்.

★

மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



கலை இலக்கிய மாத இதழ்

60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நவம்பர் இதழ் தயாராகின்றது

சோவியத் புரட்சியில் நேருக்குநேர் நின்று ஆயுதம் தாங்கியவர் நோபல் பரிசு பெற்ற மைக்கேல் ஷெலகவ் அவர் வாழ்ந்த காலம் முழுமையும் உலக இலக்கியத்தில் பிரதிபலிக்க வைத்த பெருமை அவருடையது. அவரது கருத்துக்களைத் தாங்கி வெளிவருகின்றது நவம்பர் இதழ்

# பலதிலும் பத்து

லண்டன் மாநகர வீதிகளில், இரவென்றும் பாராது, பகலென்றும் பாராது, அலைந்து திரிந்தாள் அவள். அவள் பெயர் லுன்டின் லிறிஸ்பீனு. அலைந்து திரிந்த அவளை போலிசார் கைதுசெய்தனர். அவள் யார்? அவள் ஊர் ஏது? என்று அவளிடம் அறிய முயன்றனர். ஆனால் ஊமையும் செவிடுமான ஒரு பெண் அவள்.

அதிர்ச்சி

பொலிசாருக்கு பெரிய தலையிடியாய் போய்விட்டது. முடிவில் அவர்களுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அந்தப் பெண்ணை, யாராது அடையாளம் காட்டுவார்கள் என்று எண்ணி 'டெலிவிஷனில்' அவள் உருவத்தைக் காட்டினர். தன் உருவத்தை டெலிவிஷனில் கண்டு அதிர்ச்சி அடைந்த அவள் கேட்கும் சக்தியையும், பேசும் சக்தியையும் பெற்று விட்டாள்.

'யுவனும் யுவதியும் சந்தித்தனர்' எனும் ஆர்மோனியாவின் மாபெரும் கவி ஸாயாட் நோவாவின் கவிதைப் பிரதி ஜோர்ஜிய கைப்பிரதி நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதை இளம் ஆர்மேனிய அறிவாளி மாயா ரபரவா கண்டெடுத்தார்.

கவிஞர்

இக்கவிதைகள் கவிஞரது ஆரம்பகாலப் படைப்புக்களாகும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆர்மேனிய, ஜோர் ஜிய, அஸர்பைஜான் மொழிகளில் எழுதிய இப் பெருங் கவியின் படைப்புகள் ஜோர்ஜியாவில் மிகப் பரவலாக சமீபகாலத்தில் கற்கப்பட்டுள்ளன.

ஸாயாட் நோவா பற்றி விஞ்ஞானப் பேரவை உறுப்பினர்கள் ஐ. கிரிஷாவில்லி, ஜி. லியோனிட்ஸே, கே. கெகலிட்ஸே, ஏ. பராமிட்ஸே ஆகியோர்கள் ஆய்வு நூல்களை எழுதியுள்ளனர்.

சினிமா

4-வது சர்வதேசிய திரைப்பட விழா பனுமாவில் சமீபத்தில் முடிவுற்றது இவ் விழாவில் சோவியத் யூனியன், போலந்து, பிரான்ஸ், இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா, மெக்ஸிக்கோ மற்றும் பல நாடுகள் கலந்து கொண்டன.

சோவியத்தின் 'ஹம்லட்' படத்திற்கு மூன்று பெரும் பரிசுகள் கிடைத்தன. விழாவின் தலைசிறந்த பரிசான 'கிரான்ட் பிரைஸ்' இப் படத்திற்கு அளிக்கப்பட்டது, இனோகென்டி ஸ்மோக்டுனேவ்ஸ்கிக்கு சிறந்த நடிகர் பரிசும் கிடைத்தது.

மிக்காயில் பொகின் டைரக்ட் செய்த 'அவர்கள் இருவரும்' என்ற சிறு அம்சப் படத்திற்கும் முதல் பரிசு கிடைத்தது.

படப்பிடிப்புக்கான முதல் பரிசு போலிஸ் படங்கள் இரண்டிற்குக் கிடைத்தது.

'கருப்புக் காற்று' எனும் மெக்ஸிக்கோ படத்திற்கு விசேஷ பரிசு வழங்கப்பட்டது. கனடாவினதும், நெதர்லாந்தினதும் டாக்யூமென்டரிப் படங்களுக்கும், இரு பரிசுகள் அளிக்கப்பட்டன.

புதையல்

மத்திய காலத்து தத்துவத்தையும் மற்றும் சிந்தனைகளையும் விளக்கும் நூலான 'முஜம்லுல் உறிக்மட்' தத்துவச் சுருள் எனும் புராதன ஏட்டுச் சுவடியை டஜிக் கவிஞர் மஉறமுட் டெயோரி தற்செயலாக சமர்க்கன்ட்டில் பழம் நூல்களுக்கு மத்தியில் கண்டெடுத்துள்ளார்.

இந்தப் பிரதி போக இந்த நூலின் மற்றும் இரு பிரதிகளையே உலகம் இதுவரை அறிந்துள்ளது. இவை இப்போது லண்டனிலும் பெர்லினிலும் உள்ளன.

வம்சாவழி

உயர்ந்த மிருகங்களின் வம்ச பாரம்பரியத்தை மாற்றுவது பற்றி ஆர்மேனிய விஞ்ஞானப் பேரவையின் பிராணி சாஸ்திர நிலையம் விரிவான ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளது.

ஒரு இளம் பன்றியின் ஈரலின் சத்தை அடைவைத்த ஒரு முட்டைக்குள் செலுத்தினர். 10—15 தினங்களில் முட்டையைப் பரிசோதித்துப் பார்த்த

போது கோழிக்குஞ்சின் ஈரல் பன்றியின் ஈரல் அமைப்புடையதாக இருப்பதை விஞ்ஞானிகள் அவதானித்தனர். இந்த முதல் பரிசோதனையை வைத்துக் கொண்டு ஒரு இறுதியான முடிவுக்கு வரமுடியாது என்ற போதிலும், வம்ச பாரம்பரியத்தை மாற்றுவது சாத்தியம் என்ற கருத்தை இது வலுப்படுத்துகிறது என நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

வம்சாவழி

இலங்கை மக்களால் ஹிரோஷிமா நகருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட புத்தர் சிலை ஒன்றின் தலையை சில காலிப்பயல்கள் உடைத்துவிட்டனர்.

கொடுமை

இந்தக் கொடுமையைச் செய்த குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் ஹிரோஷிமா பொலீசார் முயற்சி எடுக்கின்றனர்.

கேளிக்கைக்காரர்கள், சீட்டாடுக்காரர்கள் பிரிட்டனில் மலிந்துவிட்டனர். இதனல் பிரிட்டன் மேற்கூறியவர்களின் சுவர்க்கமாக மாறிவருகிறது.

நாட்டில் அதிகரிக்கும் குற்றங்களுக்கும், மேற்கூறியவர்களுக்கும் அதிகம் தொடர்புள்ளதாக பிரிட்டன் உள்நாட்டு அமைச்சர் தெரிவித்தார்.

கட்டுப்பாடு

இதனல் மேற்கூறிய இடங்களை சோதனையிட பொலிசாருக்கு விசேட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதுடன் கிளப்புகளை நடத்துவோருக்கு அதிக கட்டுப்பாடுகளை விதிக்கவும் புதிய சட்டம் வரவிருப்பதாக அறியப்படுறது.

அழிந்துகொண்டிருக்கும் புராதன பிரான்ஸ் இலக்கியத்தை மீண்டும் புத்துயிர் கொடுத்து உலவப் பண்ண பாரிஸ் நகரில் உள்ளவர்கள் எவ்வளவோ ஆர்வம் காட்டுகிறுர்கள்.

ஆர்வம்

பாரீஸ் நகரின் எந்த மூலையில் இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு எண்ணை டயில் பண்ணவேண்டியது தான். உடனே வீடுதேடிவரும் பெண்மணி, பிரான்ஸின் புராதன இலக்கியத்தில் இருந்து ஒரு கவிதையை, இனிமையுடன் பாடி பொருள்கூறிச் செல்வாள்.

சவாரி

அண்மையில் ஒரு சோவியக் கப்பல் திமிங்கல வேட்டையாடுகையில் செர்கி மிச்செக்கோ என்பவர் தவறி விழுந்துவிட்டார். இதனுல் உலகிலேயே திமிங்கிலத்தின் முதுகில் முதன் முதலாகச் சவாரிசெய்த பெருமை இவரை வந்தடைந்தது.

திமிங்கலத்தைப் பிடித்துக் கப்பலே நோக்கி இழுக்கும்போது தவறி விழுந்த மிச்செக்கோ திமிங்கிலத்தின் முதுகில்மீது விழுந்துவிட்டார். திமிங்கலத்தின் மீது விழுந்துவிட்ட அவரைக் காப்பாற்ற ஒரு சிறிய படகை அனுப்பினுர்கள். அதற்குள் அவர் சிறிதும் அஞ்சாமல், திமிங்கலத்தின் முதுகில்மீதே சவாரியை ஆரம்பித்துவிட்டார். திமிங்கலம் எவ்வளவோ திமிறிப் பார்த்தது அவர் பிடித்த பிடியை விடவில்லே. சிறிது நேரத்தில் அனுப்பப்பட்ட படகு அவரைக் காப்பாற்றிவிட்டது.

ஆச்சரியம்

வடக்கே தலே வைத்துப் படுப்பது ஆகாது என்று நமது நாட்டில் ஒரு நம்பிக்கை இருந்துவருகிறது. ஆனுல் வடக்கேதான் தலேவைத்துப் படுப்பேன் என்று பிடிவாத தீர்மானத்துடன் செயலாற்றிய எழுத்தாளரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? பிரபல ஆங்கில எழுத்தாளரான சார்ல்ஸ் டிக்கன்ஸ்தான் அவர். அவர் தன்னுடன் எப்பொழுதும் திசை காட்டும் கருவியை எடுத்துச் செல்வாராம். அதில் வட திசையை அறிந்துகொண்டு அப்பக்கமாகவே தலேவைத்துப் படுத்துத் தூங்குவாராம்.

---

## வேந்தனர் புகழ்

**'வன்னியூர்க் கவிராயர்'**

செந்தமிழ்த்தென் னமுதினிலே காதற்தேனே
சோகக்கைப்பதை, வீர உறைப்பைச் சேர்த்து
சிந்தையறி வுணர்வுள்ளம் தொட்டெல்லோர்க்கும்
சிறுவர்கட்கும் பேச்செழுத்தாற் திகட்டாநல் வி
ருந்தளித்த கவிஞன், பண் டிதன்,பே ராசான்
உயர்சைவப் புலவன்,பேச் சினிலும் வேந்தன்
வெந்துடல்நீ ருகியுமே வாழும் வித்வான்
வேந்தனர் புகழ்பூவில் மிகுத்து வாழ்க!

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

*கவிஞர் வேந்தனர் அவர்களின் கவிதைப் பூம்பொழில் தொகுதிக்கு அளிக்கப்பட்ட சிறப்புப் பாயிரம்.*

# சோமசுந்தரப் புலவரின் வாரிசு

கவிதைப் பூம்பொழிலில் யான் புகுந்தேன். குயில்கள் கூவின. மயில்கள் ஆடின. கிளிகள் மழலை பொழிந்தன. மந்த மாருதந் தவழ்ந்தது. மல்லிகை முல்லைகள் மலர்ந்தன. ஆறுகள் மலைகள் முகில்கள் அணிசெய்தன. ஐந்திணை வளங்கள் மிகுந்தன. சிறுவர் சிறுமியர் ஆடினர்; பாடினர். எனக்குக் குதூகலம் விறியது. அங்கும் இங்கும் உலாவத் தொடங்கினேன். அருமந்த பாடல்கள் இனிய இசைக்கறியோடு சற்றே அபிநய தாளிதமுஞ் சேருமானுல் என்னை ஆனந்தக் கூத்தாட்டியிருக்கும். முப்பதுவருடங்களுக்குமுன்னே தோன்றியிருக்குமானுல் கத்தரித் தோட்டத்துககு அருகிலே ஆடிப் பிறப்பை அடுத்து இப்பாடல்கள் அமர்ந்திருக்கும்.

சும்மாவுக்கு இருந்த என்பால் சுமை ஒன்றிருந்ததை அப்பொழுது உணர்ந்தேன். அங்கே தேசிகவிநாயகம்பிள்ளை இங்கே சோமசுந்தரப் புலவர் என்று சொல்லிக்கொண்டிருப்பவன் யான். தேசிகவிநாயகம்பிள்ளைக்கு வாரிசு ஆய் அங்கே எத்தனையோபேர் உளராமே. இங்கே சோமசுந்தரப் புலவரின் வாரிசு யார் என்பதுதான் என்பாலிருந்த சுமை.

கிழக்கு மகாணத்தில் விபுலாநந்த சுவாமிகளின் அரும் பெரும் கவித்துவத்துக்குப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வாரிசு. வடக்கு மாகாணத்தில் சோமசுந்தரப்புலவரின்வாரிசு யார் என்பதற்கு இப்பொழுதுவிடைஎளிதாய்ப்போய்விட்டது

இனி இரசிகசிகாமணிகளே, சோமசுந்தரப்புலவரின் வாரிசு ஆகிய கவிராயர் அவர்களின் நாமத்தை உச்சரித்துக்கொள்ளுங்கள். நான் கவிராயர் என்று வழங்குவதுபோலவே, பலவேறு சந்தர்ப்பங்களில் பலவேறு முகமாகப் பலவாகிய பட்டங்களை அவருக்கு வழங்கியிருக்கின்ருர்கள். முயற்சி திருவினையாக்கும் அன்ரே.

கவிராயர் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு மிகப் பழக்கமானவர், யாவருக்கும் அறிமுகமானவர்.

வித்துவான் க. வேந்தனர்

# கவிதைக் கடிதம்

[அமரத்துவ மடைந்த வித்துவான் க வேத்துனர் அவாகள், இரசிகமணி கனக செந்திநாதனவர்களுக்கு தாம்எழுதிய பாடல்கள் சிலவற்றைச் சேகரித்து அனுப்புமாறு எழுதிய கவிதைக் கடிதம் இது. இக் கவிதைக் கடிதத்திலே, கவிஞர் ஒருவர் உயிருடன் இருக்கும் பொழுதே அவரது பாடல்கள் இரசிகர்கள் மத்தியிலும் போது மக்கள் மன்றங்களிலும் புகழப்படுவதைக் கண்டு எங்ஙனம் பூரிப்படைகிருர் என்பது தெளிவாகிறது 'காலைத்தூக்கி' ஒன்ற வேந்தனரின் பாடலைப் பிரபலப்படுத்திய இரசிகமணியை வேநதனர் வாழ்த்தும், உளப்பாங்கைக் கண்டு நாமும் பெருமிதமடைகிருேம்]

இனிய தமிழில் இலக்கியங்கள்
என்றும் நுகரும் இரசிகமணி
கனக-செந்தி நாத னென்றே
கற்ருேர் போற்றும் கலைச்செல்வ!
கனியும் அன்பால் எனைப்போற்றிக்
கவிஞன் என்றே பாராட்டும்
புனித உளத்தாய், நின்புலமை
பொலிக, பொலிக பல்லாண்டு.

'காலைத்தூக்கி கண்ணி லொற்றி
என்று தொடங்கும் என் கவிதை
சாலச் சிறந்த தென் றெங்கும்
சாற்றி உள்ளம் தழைத்திடுவோய்!
காலங் கடந்து வாழ்கவிஞன்
கருத்தைக் காணும் திறனய்வுக்
கோலின் செம்மை கோடாநின்
குடைக்கீழ்க் கவிஞர் குலம் வாழ்க!

உங்கள் இடத்தில் என்கவிகள்
உளவேல் அவற்றை உவந்தென்பால்
திங்கள் ஒளிபோல் செயலினியீர்
தேடி விரைவில் சேர்த்திடுவீர்
அங்கும் †'சர்மா' அவர்களுக்கோர்
அன்புக் கடிதம் அனுப்பிடுவீர்
தங்கள் உதவி எனைப்புரக்கும்
தமிழ்த்தாய் உதவி எனக்கொள்வேன்.

---

†'சர்மா' என்று இங்கே குறிப்பிடப்படுபவர், புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியின் ஆசிரியர். சமஸ்கிருத பண்டிதர். பழைய கதை, கட்டுரை, கவிதை என்பவற்றைச் சேகரித்து வைத்திருப்பவர். மறுமலர்ச்சிச் சங்கத்திலும் பத்திரிகையிலும் தொடர்புடையவர். நல்ல கட்டுரையாசிரியர். கனக செந்திநாதன் மதித்துப் போற்றும் ஒருவர்.

வ. பொன்னம்பலம் எம். ஏ.

# தமிழ் காத்த வேந்தன்

1947ம் ஆண்டு மாண வனுக நான் இருந்தபோது திரு. வேந்தனுர் அவர்களை ஒரு இலக்கிய விழாவிற்கு அழைத்து எனது சொந்தக் கிராமமான அளவெட்டியில் அவரின் தமிழ் அறிவும் சொல்லாற்றலும் கூடிய பிரசங்கத்தை முதன் முதலாகக் கேட்டேன். அன்று தொட்டு அவரை ஈழத்தில் தமிழ்வளர்த்த வேந்தருள் ஒருவனுகவே நான் கருதி மதித்து வருகிறேன்.

1954-ம் ஆண்டு வரையில் யாழ்நகர மண்டபத்தில் பாரதியை நினைவுறுத்தும் பேச்சு, கட்டுரைப் போட்டியொன்றை யாழ் முற்போக்கு வாலிபர் இயக்கம் அமைத்தபோது, மகாநாட்டில் கலந்து பரிசில் வழங்கி பாராட்டிப் பேசிய அவர் தமிழ் வளர வேண்டுமாகில் தமிழைப் பேசும் மக்களின் வாழ்க்கை மலர வேண்டும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை பூண்டிருந்தார் என்பது தெளிவுபட்டது.

கடந்த பத்தாண்டு காலத்தில் இப்பெரியாருடன் நெருங்கப் பழகி அவரின் தமிழ் அறிவைப்பெற எனக்குப் பல பொது மேடைகளும், இலக்கிய மன்றங்களும் வாய்ப்பளித்தன. வீட்டில் பலநாட் சென்று பழகும் வாய்ப்பு கிடைத்தமை அவரின் உள்ளத்தை நன்கு உணர எனக்கும் பெரும் வாய்ப்பாக இருந்தது.

கடந்த ஆண்டில் கிளிநொச்சியில் நடந்த சாகித்திய விழாவிற்கு அவருடன் கூடிச்செல்லக் கிடைத்த பேறு அவருடன் சில மணிநேரம் மனம்விட்டுப் பேசச் சந்தர்ப்பம் அளித்தது. கடைசியாக அவரைச் கரணவாய்த் திருவள்ளுவர் விழாவிற் சந்தித்து பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இவ்வாறு அவருடன் பேசப் பழகக் கிடைத்த வாய்ப்புகள் வேந்தன் தனக்கென ஒரு வாழ்க்கைத் தத்துவம் ஒன்றை ஏற்று வாழ்ந்து வந்தார் என்பதையும் அது சில உயர்ந்த அறங்களால் ஆக்கப்பட்டது என்பதையும் என்னை உணரவைத்ததுடன் அவர்மீது எனக்கிருந்த அன்பையும் மதிப்பையும் அதிகரிக்கச் செய்தன.

'மானிடம்' உயர்ந்தது என்றும், இலக்கியங்கள் உயர்ந்தவைகள் என்பதற்கு ஒரே அளவுகோல் அவை மனிதனைப்பற்றிப் பாடியிருப்பதே என்றும் எங்கும் கர்ஜித்து வந்தார்,வேந்தன்.

தொல்காப்பியம் முதல் சிலம்பு வரை உதாரணங்கள் எடுத்துக் காட்டி ''குடிமக்கள் காப்பியம்'' ஆன சிலப்பதிகாரத்திற்கு நிகர் வேறு தமிழ் இலக்கியம் எதுவும் இல்லை என்று வாதாடுவார். முடியாட்சி முறையை ஒழித்து குடியரசு முறையை தமிழ் இலக்கிய மரபில் அமைத்துக் பாடிய சிலம்பு அவர் உள்ளத்தில் நிலையான இடம்பெற்ற நூலாகும்.

''இளங்கோ இலக்கியம் வகுத்தவன், வள்ளுவன் வகுத்த இலக்கணத்திற்கு அமைய'' என்று முழங்கும் வேந்தன், ஏழைகள் பக்கம் நின்று குரல்கொடுத்தார், ''அல்லலற்பட்டு ஆற்றுது அழுத கண்ணீர் அன்றே......'' என்று தனது உரத்த குரலை உயர்த்தி, 'செல்வத்தைத் தேய்க்கும் படை' என்று கூறி முடிக்கும்போது, மண்டபத்தில் பெருமழை பெய்து ஓய்ந்த ஒருவகை நிசப்தம் நிலவும். அநீதியை எடுத்துக்காட்டி ''கண்ணகி மதுரையில் மூட்டிய தீ அறநெறி பிழைத்தோர்க்கு அறம் கூற்றுகும்'' என்பது என்றும், அது அன்றும் இன்றும் என்றும் அவசியம் என்றும் வேந்தன் வேண்டி நிற்பார்.

சாதிக் கட்டுப்பாடுகளையும், பேய், . பில்லி, சூனியம் போன்ற மூடநம்பிக்கைகளையும் வேம்பென வெறுத்தார். அவருடைய சொற்பொழிவில் ஒரு புதிய ஜனநாயகத் தமிழர் வாழ்க்கை முறையை பாரதி வழிநின்று காணத் துடித்தார் என்பது தெளிவு. சைவசமய அபிமானியாகத் திகழ்ந்த அவர், நாவலர் பெருமானின் உத்வேகத்துடன் அன்னிய கலாச்சாரப் பிடியினின்று இலங்கை மக்களும், தமிழ்ப் பாரம்பரியமும் காப்பாற்றப்பட வேண்டுமென்று நம்பித் தனது வாழும் முறைமைகளைக்கூட அதற்கு ஏற்றபடி ஆக்கிக் கொண்டார்.

ஈழத் தமிழ் அறிஞரைப் போற்றிச் சகல தமிழ்த் தலைவர்களையும் மதித்து நடந்தபோதும் தான் சரியெனக் கண்டதை, உணர்ந்ததைப் பிறர் முன்னிலையில் கூசாது கூறும் உயர்பண்பு அவரிடமிருந்தது. தமிழ்மொழியில் அளவுகடந்த அன்புடைய அவர் தமிழ்வளர மொழியின் மொழியைப் பேசும் மக்களின் தேவைகளை உணர்ந்து புறமொழிகளைக் கற்று புதிய நூல்களைத் தமிழ் மொழியில் உருவாக்குவதன் அவசியத்தை உணர்ந்தும் உணர்த்தியும் வந்தார் ஆங்கில மொழி அறிவு படைத்த அன்பர்கள் தமிழ் மொழிக்கு அரசியல், பொருளியல், சட்டம், தொழில் நுட்பம், மருத்துவம், அறிவியல் ஆகிய துறைகளில் அளப்பரிய தொண்டு செய்ய முன்வர வேண்டுமென்று மேடையில் நின்றே அறைகூவி அழைப்பார்.

பரமேஸ்வராக் கல்லூரியில் அளவுகடந்த அன்பு கொண்டிருந்த வேந்தனர் யாழ்ப்பாணத்

தில் கிறித்தவச் செல்வாக்கில் நின்று விடுபட்ட தமிழ் மக்களின் பண்பு, கலை, கலாச்சாரம், தத்துவம் முதலியனவற்றைக் கட்டிக்காத்து அதே வேளையில், தமிழ்ப் பேசும் இளைஞர்களுக்கு அறிவியல், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் உயர் கல்வி தரவல்ல 'பல்கலைக்கழகம்' இராமநாதர் பெயரில் அமைய வேண்டும் என்ற பேரார்வம் அவர் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்தது.

நண்பர்கள் பழகுவதற்கு இனிய பண்பும், பழமைப் பிரியர்கள் கேட்டு அஞ்சி நடுங்கும் தொனியும், அறிஞர் பாராட்டும் தமிழ் அறிவும், நடுவணர் மெச்சும் பக்கம் கோடா பண்பும், கொடுமைகண்டு சீறும் சீற்றமும் ஒருங்கே பொருந்திய பெரு வேந்தன் இறந்தும் இறவா வரம் பெற்றுவிட்டார். தமிழ் காத்த வேந்தனே வாழ்க! நீ வளர்த்த புதுமைத் தமிழ் வாழ்க!!

## ⊙ புதையல்

பர்மாவில் யுத்த சமயத்தில் குப்பைத் தொட்டியில் கிடந்த ஒரு அழகான சலவைக் கல்லினாலான புத்தவிக்கிரகம் ராஜாஜி வீட்டின் வரவேற்பு அறையில் இடம் பெற்றிருக்கிறது. இதைத் தட்டிப் பார்த்தால் வெண்கல நாதம் ஒலிக்கிறது. உண்மையில் இந்த விக்கிரகம் பளிங்காலானதுதான். இதை ஒரு ஆங்கிலேயர் கண்டெடுத்து கலகத்தாவுக்குக் கொண்டு சென்றார். எளிதில் தூக்கிச்செல்ல இயலாத காரணத்தால் அந்த ஆங்கிலேயர் கல்கத்தாவில் ராஜாஜி கவர்னராக இருந்தபோது அதை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார்.

பர்மாவில் குப்பைத் தொட்டியில் கிடந்த புத்தர் இப்போது பஸ்துல்லாவீதியிலுள்ள ராஜாஜி வீட்டில் காட்சியளிக்கிறார்!

கரவைக் கவி கந்தப்பனுர்

# பேனு மன்னன் வேந்தனுர்

[மறைந்த பிறகு புகழும் மரபை மாற்றி, உயிருடன் இருக்கும்போதே எழுத்தாளனின் ஆற்றலை நம்மவரும் பிறரும் அறியச் செய்யவேண்டும் என்னும் பெருநோக்கோடு, 'கரவைக்கவி கந்தப்பனுர்' என்ற புனைபெயரில் கனக. செந்திநாதன் ஈழத்து எழுத்தாளர்களில் நாற்பதுபேரை 'ஈழத்துப் பேனு மன்னர்களா'க ஈழகேசரியில் அறிமுகம் செய்துவைத்தார். அவர்களில் ஒருவர் வித்துவான் க. வேந்தனுர் அவர்கள். சரியாகப் பத்து வருடங்களுக்குமுன் (13-11-56) அவர் எழுதிய கட்டுரையின் சுருக்கம் இது. 'காலைத் தூக்கி' என்ற வேந்தனுரின் பாடல் பிரபலமாக வழிவகுத்த மேற்படி கட்டுரைரையை மல்லிகை மறுபிரசுரஞ் செய்வதில் பெருமையடைகிறது.]

எங்கள் வீட்டுக் குழந்தை அழகான பாட்டொன்றைத் தன் தம்பிக்குப் பாடிக்காட்டிக் கொண்டிருந்தது. பாட்டு இது.

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றித்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனிபோட்டுப்
பருகத் தந்த அம்மா.

இந்தப் பாட்டைப் பாடிய குழந்தையைத் தாயானவள் தூக்கிக் கொஞ்சிய காட்சி இப்போதும் என்நினைவில் நின்று அகலவில்லை. குழந்தைகளின் காதுகளை இரும்புக் காதுகள் ஆக்காமல், தாய் தந்தையர் மேலுள்ள அன்பினை இளம்பருவத்திலே ஊட்டி வளர்க்கும் கருப்பொருளைத் தாங்கி இந்த அருமையான பாட்டை இயற்றியவர் வித்துவான் க. வேந்தனுராவர்.

மேடைதோறும் முழக்கமிட்டு, வாலிப உள்ளங்களின் மனப்போக்கை யறிந்து, வாழ்ந்து உயர்ந்த அக்காலத் தமிழரின் நாகரிகத்தின் சிறப்பினையும், இக்காலத் தமிழரின் தாழ்வு நிலையையும், 'அக்கு வேறு--ஆணி வேரு'கப் படம்பிடித்துக் காட்டும் வேந்தனுரை நான் ஒரு நல்ல கவிஞராகவே மதிக்கிறேன்.

'கோலக் கொம்பின் மேலிருந்து கூவும் குயிலி'ன் கீதத்தை, கொடிய புலியும் மானும் கூடநின்று கேட்கின்றனவாம். 'எலி

யைக் கலக்கும் பூனை சுவரில் இருந்து கேட்கின்றனவாம். இளநீர் அரிக்கும் அணிலும் தலையை எடுத்துக் கேட்கிறதாம். அவை மாத்திரமா?

தாயின் பாலைக் குடிக்கும் குழந்தை
தவழ்ந்து கேட்குதே
தவளை பாம்பின் முதுகில் ஏறிச்
சாய்ந்து கேட்குதே.

என அவர் பாடுகிறார். 'புள்ளிக்கோழி எங்கள் கோழி பொரித்த குஞ்சு பத்து. வெள்ளைக் குஞ்சு மூன்று நல்ல வெடிவால் குஞ்சு ஏழு (தங்கத் தாத்தா பாடிய பசுவின் வெடிவாலோடு இந்த வெடி வாலையும் பாருங்கள்) என்று தொடரும் புள்ளிக் கோழியும் கோவிலுக்குப் போகும்போது கூட்டிச் செல்லும் பாட்டி, கும்பிடு நீ தம்பியென்று குனிந்து சொல்லும் பாட்டி'யும் 'தாடித் தாத்தா பாடித்தந்த ஆடிப்பிறப்புப் பாட்டைக், கூடிக்கூடிப் பாடி நாங்கள் கூழும் காய்ச்சிக் குடிப்போம்' என்று சோமசுந்தரப் புலவர் அவர் களின் பாடல்களின் விமர்சனம் போல அமைந்த 'தங்கத் தாத்தா' வும், சின்னப் 'பூனை'யும் 'வள்ளி'யும் பாலர்களுக்கு ஏற்ற மிகச் சிறந்த குழந்தைப் பாடல்கள் என்பதில் சந்தேகமில்லை.

'சுகாதாரக் கும்மிப் பாக்கள் சிலவற்றை எழுதித் தாருங்கள்' என்று கேட்கும் மாணவி ஒருத்தியோடு 'அவனும் அவளும்' என்ற கவிதைக் கடிதக்கதை தொடங்கியது. கவிதைக் கடிதத்தில் பல அருமையான பாடல்கள் மின்னுகின்றன. வேந்தனாரின் உள்ளத் துடிப்பைப் பிரதிபலித்துக் காட்டும் ஒருபாட்டைப் பாருங்கள்:

இமயத்தில் கொடியை நாட்டி
இவ்வுல காண்டோ மென்று
சுமையினைத் தூக்கும் கூலி
சொல்வதாற் பெருமை யுண்டோ?
நமையொத்த அடிமைச் சாதி
நானிலத் தெங்குமில்லை
சமயப்போர் சாதிப் போரால்
தமிழர்கள் தாழ்ந்துவிட்டோம்

இப்படியாகத் தமிழர் வாழ்வில் மறுமலர்ச்சி காணும் பெரு நோக்கோடு கவிதைக் கடிதம் நீளுகிறது. ஏறக்குறைய 125 பாடல் களைக் கொண்ட இந்தக் கவிதைக் கடிதமும் குழந்தைப் பாடல்க ளும் நூல்வடிவில் வரவேண்டும். * அப்போதுதான் வேந்தனாரின் புகழும் ஓங்கும்.

* அவரது பாடல்கள் 'கவிதைப் பூம்பொழில்' என்ற பெயரோடு 1964இல் வெளிவந்தன.

கவிதைகளை அடுத்து அவர் எழுதிய கட்டுரைகளைக் குறிப்பிட்டேயாக வேண்டும். வாரா வாரம் எழுதக்கூடிய வற்ருத விஷயஞானம் உள்ளவர் அவர். அவர் அப்படியே தொடர்ந்து எழுதியும் வருகிருர். அவர் எழுதிய கட்டுரைகளும் மாணவர் விருந்து, நற்றிணைச் செல்வம் என்ற கட்டுரைகளும் வேந்தனுரின் ஆழ்ந்த புலமையையும் அரிய முயற்சியையும் எடுத்து இயம்புகின்றன.

இலக்கியத்துக்கு வரையறை செய்து, 'சமண புத்த காவியங்கள் பொருட் பிறழ்ச்சியுடையவை' என்று இருளைக் கடிந்து ஒளியைக் காட்டத் தொடங்கிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது இலக்கியம், புலமை என்ற குறிப்புக்களை மறுத்து, 'போர்ப்பறை' கொட்டிய சிலப்பதிகாரக் கட்டுரைகள் வேந்தனுரின் ஞாபகசக்தியை அறிய வாய்ப்பளித்தன. இலக்கிய இரசிகர்க்குப் பெருவிருந்தாயமைந்தன. பரமேஸ்வராக் கல்லூரியின் பிரதம தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றும் வேந்தனுர் அவர்கள் தன்னுடைய கவனத்தை ஒருமுகமாக்கி நீண்ட காவியமொன்றை அளித்துத் தன்பெயரை வருங்காலச் சந்ததி மறக்காமற் செய்ய வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

'எஜமானே! மீன்கள் நீரிலே எப்படி வாழுகின்றன என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'

'இதில் ஆச்சரியமென்ன? தரையிலே மனிதன் வாழ்வதைப் போலத்தான். பெரியவை சிறியவைகளை விழுங்கி வாழ்கின்றன'

— ஷேக்ஸ்பியர்

ஐ. ஆர். அரியரத்தினம் B. Sc.

# ஆசிரியர் வேந்தனுர்

தமிழ் ஒலித்த இடமெல்லாம் தன் நாமம் ஒலிக்கும்படி வாழ்ந்த தமிழ் வேந்தனும் வித்துவான் வேந்தனுர் அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். நான் யாழ்ப்பாண பரமேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் என் உடனுசிரியாகக் பல வருடங்கள் கடமையாற்றியமையினுல் இவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது.

அமைதியும் ஆடம்பரமுமற்ற ஒரு தமிழ் ஆசிரியன் என்றுதான் பலர் அவரை அறிவர். அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அவ்வரை உற்றுநோக்கியவர்கள், அவரிடம் நிறைந்திருந்த ஆழ்ந்த புலமையையும், ஞானத்தையும் கண்டிருப்பர். இவர் சில குறை குடங்களைப் போல பயனற்ற வெட்டிப் பேச்சுப் பேசி, போலிக் கௌரவத்தை நிலைநிறுத்த முயற்சித்தவரல்ல. அவர் ஒரு நிறைகுடம். அவருடன் நெருங்கிப் பழகியவர்கள், அவரிடம் நிறைந்திருந்த பரந்த இலக்கிய அறிவையும், தமிழ்ப் பண்பாட்டின் திறனையும் கண்டு மூக்கின்மேல் விரலை வைத்து அதிசயிக்கவில்லை. கற்கண்டின் சுவை அதனை உமிழ்பவர்க்கல்லவோ தெரியும்.

கல்லூரி வகுப்பறைக்குள் சென்று பார்த்தால் அவருடைய தமிழ் இலக்கியப் பற்றைக்காண எளிதாக இருக்கும். தமிழையும் தன்னையும் அவர் வேருக நினைத்தவரல்ல. தமிழே அவர் மூச்சு. தன் கடமையில் கண்ணும் கருத்துமாகவுள்ள அவர், பாட ஆரம்பமணி அடித்தவுடன் வகுப்பறைக்குள் பிரவேசித்தால்,வகுப்பையே தன் உலகமெனக் கருதி வகுப்பிற்கு வெளியே நடைபெறும் பூசல்களைக் கவனியாது, மாணவர்களுக்கு இலகுவில் புரியத் தகுந்தவிதத்தில் மாணவர்களே விரும்பிப் படிக்கத் தகுந்த முறையில் பாடத்தை நடத்துவார். அவர் பாடம் நடாத்தும் முறையைப் பார்ப்பவர் இலக்கியத்தை வேப்பங்காயாக் கருதுபவர்கூட, இலக்கியத்தை விரும்பிக் கற்பர். இனிக்கும் கரும்பாக எண்ணுவர்; சுவைப்பர்.

இலக்கியத்தில் இறங்கிவிட்டால், பாடம் முடிவதற்கான மணியடித்தல் அவர் காதிலோ, அவர் மாணவர் காதிலோ விழுவதில்லை. அவ்வளவு தூரத்திற்கு

பாடத்தில் மெய்மறந்து – பாத்திரமாக மாறிக் கொண்டிருப்பர் – இருபகுதியினரும்.

மாணவர்களை மாணவர்களாக மாத்திரம் கணிக்காது, தான்பெற்ற குழந்தைகளைப் போல் பேணி, அவர்கள் மனத்தில் பதியத்தக்க முறையில், அவர் பாடம்சொல்லிக் கொடுப்பதினுல், மாணவர்களும் அவரை ஆசிரியர் என்று மாத்திரம் எண்ணுது ஒரு இலட்சியத் தந்தையாகக் கருதி, அவர்மீது அன்பும் பக்தியும் கொண்டுள்ளனர்.

கல்வி கற்கும் மாணவர்கள் கருத்தில், கற்கும் பாடத்தில் ஆர்வமேற்படச் செய்தலே ஆசிரியரின் திறமையைக் காட்டும். பல ஆசிரியர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து, தாங்கள் கற்பிக்கப்போகும் பாடத்தை ஆயத்தப்படுத்தி, மாணவர்களுக்கு வாழைப்பழத்தை உரித்து தீத்துவது போல் கற்பிக்கின்றனர். இது மாணவர்கள் மனதில் பதிவதுமில்லை. அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுவதுமில்லை. இது ஆசிரியரின் திறமையின்மையைக் காட்டுகின்றது. இதற்கு விதிவிலக்காக, வித்துவான் வேந்தனுர் அவர்கள், தான் தமிழ் மொழியில் இலக்கியத்தில் கொண்டுள்ள பற்றை தர்க்கரீதியான வாதத்துடன், பண்புடன் விவாதம் செய்து, மாணவர்களுக்குப் பற்று ஏற்படச் செய்யும் திறமையுடன் போதிப்பார்.

அவர் பாடத்தை ஆயத்தப் படுத்த வேண்டிய நிலைமையில் என்றுமே இருந்ததில்லை ஒரு கவிதையை அவர் விளக்க எடுத்தால், அந்தக் கவிதையின் இலக்கணத்தை – அதன் அமைப்பை – செறிந்திடும் நயத்தை – இலக்கிய தாரதம்மியத்தை அக்கு வேறு ஆணிவேருகப் பிரித்து பல வேறு கவிதைகள் மூலம் விளங்கப்படுத்துவார். ஒரு கவிதை படிக்கவேண்டிய மாணவர்கள் அவர்களே விரும்பும் வண்ணம் பல இனிய கவிதைகளைப் படிக்கச் செய்யும் பாங்கு வித்துவான் வேந்தனுரிடம் கூடப்பிறந்த சொத்து.

அவர் ஒரு தமிழ்க் கடல். அதிகமாகக் கடலில் முத்துக் குளிப்பவர்களுக்கு கிடைப்பது வெற்றிச் சிப்பியே. வித்துவான் வேந்தனுர் என்ற தமிழ்க் கடலில் முத்துக்குளிப்பவர்களுக்கு கிடைப்பது வெற்றுச் சிப்பியல்ல. அத்தனையும் முத்துச் சிப்பிகளே. அவருடைய மாணவர்களில் தமிழ்ப் பாண்டித்தியத்திலோ தமிழ் இலக்கியத்திலேயோ சித்தியெய்யாதவர் யாருமில்லை. இது அவருடைய ஆசிரிய தொழிலின் வெற்றிக்கு, பெருமைக்குச் சான்று.

அவர் மாணவர்களுடன் நெருங்கிப் பழகினுர். தன்நீண்ட கைகளினுல் மாத்திரமன்றி விரிந்த தன் இதயத்தினுலும் அணைத்து தன்பரந்த நெஞ்சை மாணவர்களுக்கு தஞ்சமாகக்

கொடுத்த தன்னிகரில்லாத் தமிழ் வேந்தன் மாணவர்களுடன் அளவளாவுதை மிகவும் விரும்புவார், மாணவர்கள் கேள்வி கேட்பதை ரசிப்பவர் தன் கொள்கைக்கு எதிர்மாறுன கொள்கையுள்ளவர்களையும் மதித்து அணைத்து மகிழ்பவர் மாணவர்கள் விளங்காத ஒன்றைக் கேட்கப்போனல், அவர் மனம்நோகாதவாறு இனிக்க இனிக்கப் பேசி அவர்கள் மனதில் பதியும்படி அழகாகச் சொல்ல வேண்டும் என்றுஎண்ணும் அவரிடம் 'விளங்கப்படுத்துங்கள்!' என்று எந்த மாணவரும் கேட்கவில்லையே என்ற குறை அவருக்கு உண்டு தெளிவாக, நுட்பமாக கல்வி கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர். எவ்வளவுதான் மிதமாக மனம் விட்டு மாணவர்களுடன் பழகினுலும் – தான் ஆசிரியராக இருந்தும் கல்லூரிக்கு வெளியே மாணவர்களை தன் உற்ற நண்பர்களாக எண்ணி அளவளாவினுலும் – அந்த நல்ல மாணவர்கள், அவர் தோள்மீது ஏறவில்லை. மாருக அன்பு, பக்தி, அடக்கம், பண்பு மிக்கவர்களாக அவருடன் பழகினுர்கள். கல்வியை மாத்திரமன்றி கற்றவர்களுக்குரிய நற்பண்புகளையும் மாணவர்கள் மனத்தில் விதைத்த மாசில்லாச் செம்மல், வேந்தன்.

திரு. வேந்தன் அவர்கள் வகுப்பறையில் மட்டும் தமிழ் மொழியின் பாசத்தை மட்டுப்படுத்தியவரல்ல. தான் விடும் ஒவ்வொரு மூச்சும் தமிழின் வளர்ச்சிக்கே என்று வாழ்ந்த அவர் – ஆங்கில மொழி உத்தியோக மொழியாக உபயோகிக்கப்பட்டு வருவது தமிழின் வளர்ச்சிக்கு இடையூறு என்பதைத் திட்டவட்டமாக, இதயபூர்வமாக நம்பிய அவர் – நம் நாட்டு தேசிய மொழிகளான தமிழ் – சிங்களத்தில் உயர்தரக் கல்வி கற்பிக்க முடியாது என்று தான்தோன்றித் தனமாகப் பேசித் திரிந்தவர்களின் போலி வேசத்தை இழித்து, தமிழ்மொழியில் சகல நடவடிக்கைகளேயும் திறம்படச் செய்யமுடியும் என்பதை செயலில் காட்டிய சிலருள் பிரதான அங்கம் வகிப்பவர்களில் ஒருவர்.

மற்றைய இலக்கியவாதிகளைப் போல, இவரும் உணர்ச்சி வசப்பட்டவர் மற்றவர்கள் துன்பத்தைக் கண்டு கண்ணீர் சிந்தி துயரப்படுமளவிற்கு இளகிய நெஞ்சத்தை உடையவர். எதுவித ஆயத்தமுமின்றி, அழகு மிக்க பொருள் செறிவு நிறைந்த எளிமையான வார்த்தைகளைக் கொண்டு சரமாரியாகக் கவிதை புனையும் ஆற்றலுள்ளவர். அவர் கவிதைகளில் காணப்படாதது – இல்லாதது ஒன்று – அந்நிய மொழி ஆதிக்கம்.

வித்துவான் வேந்தனுர் மறைந்துவிட்டார். அவர் மூச்சு நின்றுவிட்டது. அவர் விட்ட மூச்சுக்கள், அவர் விதைத்த வித்துக்கள் முளைவிடத் தொடங்கிவிட்டன. அவர் சிந்திய முத்துக்கள், விலைமதிக்க முடியாத முத்துக்களாக ஒளிவிடுகின்றன. அவர் மறைவினுல் ஏற்பட்ட இடைவெளியை யாராலும் பூரணமாக நிரப்ப முடியாது விட்டாலும், அவரின் நல்ல மாணவர்களினுல் சிறியதாயினும் நிரப்பப்படும் என்பது என் எண்ணம். அவர் பெயர் தமிழ் மக்கள் மத்தியில் – நன்றியுள்ளம் இருக்கும் வரை நிலவும்; நிலவும்.

★

டொமினிக் ஜீவா

# வேந்தனல்ல—மனிதன்!

உங்களுக்குத்தான் தெரியுமே, நான் தெருத்தெருவாகச் சுற்றுலா வருவதை ஒரு தினசரிக் கடமையாகவும் புதுவிதக் கலையாகவும்ஒருவிதபொழுது போக்காவும் கடைப்பிடித்து ஒழுகி வருபவனென்று

நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக – கூடிப்போனால் இன்னுமொரு அரை வருடத்தையும் சேர்த்து நாலரை ஆண்டுகளுக்கு முன்னர் – ஒருநாள் கால்கள் போனபோக்கில் ஆஸ்பத்திரி வீதி வழியாகச் சுற்றுலாச் சென்றுகொண்டிருந்தேன். நான் புதிய பஸ்நிலையத்தைத் தாண்டி. மின்சார நிலையக் கட்டடத்தைக் கடந்து ஆஸ்பத்திரியின் ஆரம்ப முகப்பு மதிலுக்குச் சமீபமாக நெருங்கிவிட்டேன்.

''தம்பி...எடேய்!''

ஏதோ குருட்டாம் போக்கான சிந்தனையுடன் எதைப் பற்றியெல்லாமோ யோசித்துக் கொண்டு சென்ற என்னை இந்த அழைப்புக்குரல் சட்டென்று தடுத்து நிறுத்தியது.

வீதிகளில் கூப்பிடப்படும் ஆயிரம் அழைப்புக்களில் இதுவும் ஒன்ருக இருக்கலாம் என்பது என் மன நினைப்பு. இருந்தாலும் திரும்பிப் பார்த்தேன். நான் குரல்வந்த பக்கத்தைத் திரும்பிப் பார்ப்பதற்கும் மீண்டும் அதேகுரல் 'உன்னைத்தான் தம்பி...' என்று அழைப்பதற்கும் சரியாக இருந்தது.

வித்துவான் வேந்தனர்!

மலைப்பும் ஒருவித திகைப்பும் என் மனதில்.

நான் மனந்திறந்து உண்மையைச் சொல்லுகிறேனே. இந்த வித்துவான்கள், பண்டிதர்கள் என்றுலே எனக்குக் குடல் நடுக்கம். பாரதி காலத்தில் மட்டுமென்ன, இன்றுகூட இந்தப் பரம்பரையினர் நம்மைப் போன்றவர்களை வெருட்சிஅடையச் செய்விப்பதில் மகா மன்னர்கள். 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று பாரதி கவிதை இயற்றவும் இயற்றினுன் அந்தப் பாடலைச்செம்மையாகப் பிடித்துக்கொண்டு, தேன் எப்படிக் காதிலே பாயலாம்; அது நாவில் அல்லவா பாய வேண்டும்? எனப் போர்க்கோலம் பூண்டு பாரதி பாடலுக்குச் சுவைக் குற்றம் கூறி, பாரதிக்கே சவால்விட்டவர்கள் அன்றையத் தமிழ்ப் பண்டிதர்கள்!.

இந்தச் சம்பவம் உடனே எனக்கு ஞாபகம் வந்துவிட்டது ஒருவேளை எனது சிறுகதைகளி லும் இப்படியான பொருட் குற் றத்தைப் பார்த்துவிட்டு என் னைக் கடிந்துகொள்ளத்தான் இப் படி அருகே என்னை அழைக்கி ருரோ என ஒருகணம் எண்ணி னேன்.

பரவாயில்லை. பாரதியுடன் ஒப்பிடும்பொழுது நான் ஒரு சாதாரணம்தானே என்ற நினைப் பும் மனதில் சுழியிட்டது. குற் றம் சாட்டப்பட்ட பாரதி இன் றும் அப்பாடலுடன் மகாகவி யாகத் திகழ்கிருன்; ஆனல் குற் றம் சுமத்திய அறிவுச் செம்மல் களான மகா பண்டிதர்களின் திருநாமத்தின் ஒன்றைத்தானும் உச்சரிக்க நாதியற்றுப் போய் விட்டது அவர்களது தமிழ்ச் சேவை.

இந்தத் துணிச்சல்தான் என் னையும் என்னைப் போன்றவர்க ளையும் பேனவைத் தூக்கும் தெம்பையும் திராணியையும் இன்றுவரைதந்து வந்துள்ள து

அந்தத் திருக்கூட்டத்தின் அங்கங்களில் ஒருவர் என என்னல் கருதப்பட்டு வந்தவர், ''தம்பி...எடேய்!'' என உரிமை யுடன் அழைத்ததைக் கேட்டு அப்பொழுது நடுவீதியில் நின்ற பொழுது, என்னல் என்னையும் நம்பமுடியவில்லை; இந்த அதிசய நிகழ்ச்சி நடக்கும் இந்த உலக த்தையும் நம்பமுடியவில்லை.

இருந்தாலும் சம்பிரதாயம் என்று ஒன்று ஏற்கனவே இருக் கின்றதே, அதையொட்டிப் பட் டணத்துத் தமிழனைப் போல, முகத்தில் நடிப்பை வரவழைத் துப் புன்முறுவல் தவழ, 'என் னையா கூப்பிட்டீங்க?' என்றேன்.

'ஓம்; உன்னைத்தான் தம்பி. கொஞ்சம் நில்லு''

நின்றேன்.

கிட்டே நெருங்கி வந்தார், வேந்தனர்.

''தம்பி எடேய். நீ கதை எழுதினதிற்குச் சாகித்திய மண் டலப் பரிசெடுத்தாயாம். நான் பேப்பரில் பார்த்தேன். உன்னைப் பார்க்க வேண்டுமென்று நினைச் சன். மெத்தச் சந்தோஷம் உங் களைப் போன்ற இளம் உள்ளங் கள்தான் இன்று தமிழுக்குத் தேவை. நிறைய எழுது. எழு தும்போது நாலுபேர் திட்டு வான்கள்; பயப்படாமல் எழுது. ...நான் போயிட்டு வாறன்''

நட்ட நடுவீதியில் சுழல் காற்றைப்போல வந்து, காதில் இந்த இலக்கிய மந்திரத்தை ஓதிவிட்டு மறைந்து விட்டது அந்த மெலிந்த உருவம்.

மனிதர்களைப் பற்றி நாம் முன்னரே எப்படி எப்படியெல் லாமோ கற்பனைபண்ணி வைத் திருக்கிறேம்! இலக்கணப் புலிக

ளாக, வித்துவச் செருக்குடன் காட்சி தருபவர்கள், எதையும் கண்டனம் செய்வதே தமதுபிறப்புரிமையாகக் கொண்டவர்கள் என நம்மைப் போன்ற படைப்பாளிகளால் நம்பப்படும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு வித்துவானிடமிருந்து தட்டிக் கொடுக்கும் உற்சாகமூட்டுதலா, எனக்கு?

மலேத்துப் போனேன்.

அன்றிலிருந்து பட்டம்,பதவி, நடை, உடை. குலம். கோத்திரம் ஆகியவைகளைப் பார்த்து மனிதனை எடைபோடாமல், அவனை ஊடுருவிப் பார்த்து அவனுடைய இதயத்தின் பாஷையைப் புரிந்து கொள்ள இன்றளவும் முயன்று வருகிறேன். நான், தீயகொள்கைகளை எதிர்த்துப் போராடுவது மிகச்சிறந்த தொண்டு' அதற்காக மனிதனை, மனிதப் பண்புகளை நாம் மதிக்காமல் விட்டுவிடக் கூடாது.

கொள்கையளவில் — கருத்தைப் பொறுத்தளவில் — இலக்கியச் சிந்தனைப் போக்கில் ஏன் சகலவற்றிலுமே நானும் அவரும் இருதுருவங்கள். மாமிக்கும் மருமகளுக்கும் உள்ள உறவு கூட இல்லை. ஆனால் இந்த ஒரே யொரு சம்பவத்தினால் அவரது மனிதப் பண்பையும் விசாலமான இலக்கிய இதயத்தையும் புரிந்து கொண்டேன்.

இறப்பதற்கு முதல் நாளும் வித்துவான் அவர்களை நான் பஸ் நிலையத்திற்குச் சமீபமாக ஒரு தடவை கண்டேன். அவர் மீது எனக்கு உள்ள மதிப்பு ஒரு புன்சிரிப்பாக மலர்ந்தது நானே அவரோ ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

மறுநாள் இந்தக் கொடுமையான பிரிவு ஏற்படும் என முன்னரே தீர்க்கதரிசனமாக எனக்குத் தெரிந்திருந்தால்......

★

:: ஆண்நரி இறந்துபோனால் பெண்நரி மற்றொரு ஆண்நரியை விரும்புவதில்லை. ஆண்நரியும் பெண்நரி இறந்துபோனால் வேறொரு பெண்நரியை விரும்புவதில்லை. எவ்விடத்திலும் நரிகளின் சுபாவமே இப்படித்தானும்

:: புலிக்கு ஆங்கிலத்தில் டைகர் என்று பெயர். அது ஆங்கிலத்துக்குச் சொந்தமான வார்த்தையன்று. டைகர் என்பது பாரசீகச் சொல். டைகர் என்பது அம்பின் பெயர். அம்பு, நாணேற்றி விடுங்கால் வேகமாகச் செல்லும். புலியும் அதேபோல வேகமாகப் பாய்வதால் அதற்கும் அப்பெயர் இடப்பட்டதாம்.

'வரதர்'

பெண் என்பவளே புதிர்தானே?
புதிரைப் புதிராக்குகின்றது இக்கதை.

# சமர்ப்பணம்

வழக்கமாக, பிற்பகல் நாலரை மணி பஸ்ஸில் வீட்டுக்குப் போகிறவன் நான். சரியாக 4 மணிக்கு எனது அலுவலகத்திலிருந்து புறப்பட்டால் 4-20க்கு பஸ்நிலையத்துக்கு வந்துவிடுவேன். பஸ் தயாராக இருக்கும், அநேகமாக அந்த நேரத்துக்குரிய பஸ் தவறுவதில்லை. ஒன்று கெட்டுப்போனாலும் வேறு ஏதாவதொன்றைக் கொண்டு வந்து சரியாக அந்த நேரத்துக்கு நிறுத்திவிடுவார்கள். அந்த பஸ்ஸை தவறவிட்டால் பிறகு எந்த பஸ்ஸோ, எத்தனை மணிக்கோ!......அதனால் நாலரைமணி பஸ்ஸை நான் தவறவிடுவதில்லை. ஆனால் இன்று என் மனைவிக்காகச் சில பொருட்களைக் கடைகளில் வாங்க வேண்டியிருந்தது. காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டபோதே ஒரு துண்டுக் கடதாசியில் அவற்றை எழுதி என்னிடம் தந்து, 'மறந்துவிட வேண்டாம்' என்று ஒரு எச்சரிக்கையும் போட்டிருந்தாள். ஆகவேதான் நாலரை மணி பஸ்ஸை விட்டுவிட்டு, நான் கடைத்தெருவில் நுழைந்தேன்

"ஹலோ!" என்ற குரல் என் பின்பக்கத்திலிருந்து மிக அண்மையில் கேட்டது.

நானும் திரும்ப, 'எப்படி?' என்று கேட்டுக்கொண்டே ஒரு கரம் என் கையைப் பிடித்தது.

நாகையா!

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரே அலுவலகத்தில் பக்கத்து மேசையிலிருந்து கடமையாற்றிய நண்பன்! ஏதோ சில கோணல் புத்திகள் இருந்தாலும் என்னைப் பொறுத்தமட்டில் மிக நல்லவன். ஒரு வருடத்துக்கு மேலாகப் பக்கத்துப் பக்கத்துக் கதிரைகளிலிருந்து எவ்வளவு கதைகளைப் பேசியிருப்போம்! வழக்கமாக நான் கொஞ்சம் 'ஊமை'. 'வள வளா' என்று கதைககாமலிருப்பது நல்லகுணமென்று நினைத்து அப்படியிருக்கின்றேனே, அல்லது அந்தக் கெட்டித்தனம் என்னிடம் இல்லையோ தெரியாது. நாகையா எனக்கு நேர்மாறு. அவனோடு இருக்கையில் என்னாலும் கதைக்காமலிருக்க முடியாது. எவ்வளவு கதைகளைப் பேசியிருப்போம் அப்போது! இரண்டு பேரும் பிரமச்சாரிகள். பிரமச்சாரிகளான இரண்டு இளம் வாலிபர்களிடம் எவ்வளவு இனிய கதைகள் அடிபடும். அவன் தன்னைப் பற்றித் தினந்தோறும் புதுப்புதுக் கதைகள் சொல்லுவான். நல்லவேளை

— இப்போது அதை உறுதியாகச் சொல்ல முடிகிறது — மிக நல்ல வேளையாகத்தான் நான் என்னுடைய சொந்தக் கதைகளை அவனிடம் சொல்லவில்லை.

மூன்று வருடங்களுக்குப் பிறகு அந்த இனிய கதைகளின் கதாநாயகனைக் கண்டபோது, ஏனோ ஒரு பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டது இருவருடைய கைகளையும் ஒன்றோடொன்று பிணைத்துக் கொண்டபோது அந்தப் பழைய நினைவுகள் உடலெங்கும் நிறைந்து நெஞ்சுக்கு, இதமாக இருந்தன. 'எப்படி' என்று பதில் சொல்லிக்கொண்டே அவன் பின்னால் பார்த்த நான், திடுக்கிட்டுப்போனேன்.

பூமியில் ஊன்றி நிற்பதற்குத் தைரியமில்லாமல், என்னுடைய கால்கள் சோர்ந்து முடங்குவது போலிருந்தது. சாதாரணமாக இருந்த நெஞ்சு முழுவதும் வெறும் கோறையாகிவிட, அந்தக் கோறைக்குள் படக்குப் படக்கென்று ஏதோ இடிக்க ஆரம்பித்தது. 'இவள்...இவள்... அவள்தானா...?'

என் கண்கள் ஒரு கணத்தில் போய்வந்த இடத்தை நாகையா கண்டுகொண்டு, ''என்னை மன்னித்துக்கொள் மச்சான். உன்னுடைய விலாசமும் சரியாக எனக்குத் தெரியவில்லை.........போன மாசந்தான் நான் 'இல்லறம்' செய்யத் துவங்கியிருக்கிறேன்... இதோ, திருமதி நாகையா—''

திரும்ப அவளைப்பார்த்து ''இவர் என்னுடைய உயிர் நண்பர்; முத்து. கொழும்பில் வேலை பார்த்தவர் .. கொடுத்துவைத்த சீமான். இப்போது ஊரோடு வந்துவிட்டார்!'' என்றான்

அவன் சொல்லிக்கொண்டிருந்த தெல்லாம் எனக்குச் சரியாக நினைவில்லை. அதைச் சரியாகக் கேட்கக்கூடிய நிலையில் நான் அப்போது இல்லை. மின்சாரம் தாக்குவது போலேற்பட்ட திடீர்த் தாக்குதலினால் நான் அரை நினைவிலிருந்தேன். இப்படித்தான் அவன் ஏதாவது பேசியிருப்பானென்பது என்னுடைய ஊகந்தான். அவன் அவளை எனக்கே அறிமுகம் செய்துவைத்தான். நான் அவளைப் பார்த்து லேசாக உதட்டை நெளித்திருப்பேன்; அவளும் அப்படி ஏதாவது செய்துதானிருக்க வேண்டும்.

★ ★ ★

அவள்!

அவளை இவன் எனக்கு அறிமுகம் செய்துவைக்கிறானே! இவன் நேற்று வந்தவன்! அவள் ......சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னால் — 'அவள்தான் நான்; நான்தான் அவள்!'

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னால், நான் முதன் முதலாக உத்தியோகத்தில் சேர்ந்த இடம் வவுனியா. அங்கே இரண்டு ஆண்டுகள் சேவைசெய்த பிறகுதான்

கொழும்பிற்கு மாற்றலாகி நாகையாவின் பக்கத்தில் இடம் பிடித்தேன். வவுனியாவில் எனது தூரத்து உறவினரின் வீட்டில் தங்கியிருந்தேன். அந்த வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரி யாக அப்போது இருந்தவள் தான். 'அவள்' — பொன்மலர். அவள் அப்போது ஜி. சி. ஈ பரீட்சைக்கு இரண்டாவது முறை யாகப் படையெடுத்துக் கொண்டிருந்தசமயம். முதல்முறைபரீட்சையில் கோட்டைவிட்டது அவளுடைய பிழையில்லை யென்றும் அவள் எட்டாம் வகுப்புவரை படித்த யாழ்ப்பாணத்துப் பிரபலகல்லூரியிலேயே தொடர்ந்து படித்திருந்தால நிச்சயமாக ஒரே முறையில் பரீட்சையில் சித்தியடைந்திருப்பாளென்றும் அதற்கிடையில் தம்மை வவுனியாவுக்கு மாற்றிவிட்டபடியால் 'பிள்ளை'யின் படிப்பு மண்ணுகிப் போய்விட்டதென்றும் அவளுடைய அப்பா அபிப்பிராயப்பட்டார். அவருடைய வேண்டுகோளை ஏற்று அவளுக்குச் சில முக்கிய பாடங்களில் 'டியூசன்' சொல்லிக் கொடுக்க நான் ஒப்புக் கொண்டிருந்ததால். அவருடைய அபிப்பிராயம் முற்று முழுதாக ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல என்பதை அறிந்து கொண்டேன். 'எட்டாம் வகுப்பு வரை படிப்பில் பள்ளிக்கூடப் 'பிள்ளை' கண்ணும் கருத்துமாக இருந்தபடியால் ஒழுங்காகப் பரீட்சைகளில் சித்தியடைந்து வந்திருக்கிறுள். அதற்குப் பிறகு அவளுடைய உள்ளத்தில் பள்ளிக்கூட படிப்புமட்டுமல்லாமல் வேறு சில சிந்தனைகளும் குடிகொண்டு சஞ்சரிக்க ஆரம்பித்திருக்கின்றன; சினிமா நட்சத்திரங்களின் நடை உடை பாவனைகளைப் பற்றியும், நாவல்கள் சிறுகதைகளில் வரும் கதாநாயகிகளின் உளப்பாங்குகள் பற்றியும்—இந்த வகைகளிலெல்லாம் அவளுடைய புலன் போய்க் கொண்டிருக்கிறது. அதனுல் தான் பரீட்சையில் சென்ற ஆண்டு கோட்டைவிட்டாள் — இந்த ஆண்டும் கோட்டை விடுவாள்!' என்று அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்த சில நாட்களுக்கிடையிலேயே நான் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டேன்.

'இந்த ஆண்டும் நிச்சயமாகப் பரீட்சையில் தேறமாட்டாள்' என்று தெரிந்திருந்த போதிலும், அவளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதை நான் நிறுத்த முடியாமலிருந்தேன். காரணம், அவளுடைய தகப்பனின் வேண்டுகோள் மாத்திரமல்ல......

பொன்மலரைப் போன்ற கவர்ச்சியான, இனிய சுபாவமுள்ள, நல்ல வாய்ச் சாதுர்யம் வாய்ந்த ஒரு இளமங்கையோடு, ஒருசில மணிநேரத்தைக் கழிப்பது — அலுவலகத்தில் வேலை செய்து வரண்டுபோய்த் திரும்பும் என்போன்ற ஓர் இளைஞு

னுக்கு எவ்வளவு குளிர்மைதரக் கூடியது!

நான் பத்து நிமிடங்கள் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தால், அடுத்து பதினைந்து நிமிடங்களில் அவள் தன்னுடைய 'பாட'ங்களை ஆரம்பித்துவிடுவாள். இந்த வாரம் வந்திருக்கும் புதுச் சினிமாப் படத்தைப் பற்றியோ அல்லது நேற்றுப் படித்த சிறுகதையைப் பற்றியோ என்னிடம் அபிப்பிராயம் கேட்பாள். நான் சொல்லாவிட்டால், தன்னுடைய அபிப்பிராயங்களைக் கொட்டித் தீர்ப்பாள். வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அபிப்பிராயம் சொல்வதில் அவளைப்போல ஒரு விமர்ச்சகியை நான் பார்த்ததில்லை! அதிகம் மிஞ்சிவிட்டால் நான் கொஞ்சம் உறுக்கி, அவளைத் திரும்பவும் பாடத்துக்குக் கொண்டுவருவேன். ஆனல் இந்த உறுத்தல் மிரட்டல்கள் எல்லாம் சில நாட்களுக்குத்தான் உபயோகமாயின.

சில நாட்களுக்கிடையிலேயே அவள் என்னை நன்ருகப் படித்துக்கொண்டு, என்னுடைய உறுக்குதல்களை யெல்லாம் தன்னுடைய கடைவாயில் நெளியும் சிரிப்பினுல் ஊதித் தள்ளிவிட்டாள். இன்னும் சில நாட்கள் போக, அவளே என்னை உறுக்கவும் தொடங்கினுள்.

இப்படித் தொடர்ந்ததுதான் – அது எப்படி எப்போது ஆரம்பித்ததென்று என்னல் இப்போது நிச்சமாகச் சொல்லமுடியவில்லை; எப்படியோ, 'நான் அவளாகவும் அவள் நானுகவும்' ஆகிவிட்டோம்.

ஒருவனுடைய வாழ்க்கையில் தோன்றுகிற முதற் காதல் தெய்வீகமானது, சக்தி வாய்ந்தது என்று சில கதைக்காரர்கள் எழுதியதைப் படித்திருக்கிறேன். பொன்மலருக்கு இது முதற் காதல்தானு என்பதை நான் எப்படி நிச்சயமாகக் கூற முடியும்? ஆனல், என்னைப்பொறுத்த மட்டில் அதுதான் முதற்காதல். ஆனல் அந்தக் கதைக்காரன் எழுதியது போல, அதிலே பிரமாதமானதொரு சக்தியும் இருந்ததாக எனக்குத் தோன்றவில்லை. இன்று என்மனைவியிடம் காணும் காதலுக்கு முன், அது வெறும் கதை. இப்போது நினைத்தால் அது ஒரு 'விளையாட்டுக் காதல்' போலத் தோன்றுகிறது. 'விளையாட்டுக் காதல்' என்றும் ஒன்று இருக்கிறதா என்று பழைய இலக்கிய மேதைகள் சீறக்கூடும். ஆனல் என்ன செய்வது, இன்றைய இளைஞர்கள் காதல் உலகத்தில் அப்படியொரு புதிய பகுதியை சிருஷ்டி செய்துவிட்டார்களே!

இரண்டு வருடங்களாக நானும் பொன்மலரும் தெய்வீகக் காதலர்களாக இருந்ததன் பின்னர் எனக்குக் கொழும்பிற்கு மாற்றல் கிடைத்தது. இப்போது

விளையாட்டாகத் தோன்றினாலும், அப்போது அது ஒரு பெரும் வேதனையாகத்தான் இருந்தது. கொழும்பிற்குப் போனதும் நான் தவறாமல் அவளுக்குக் கடிதம் கடிதமாக காவியக் கடிதங்களை வரைந்து தள்ளினேன். சில நாட்களின் பின்னர் அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது எனது கடிதங்களிலொன்று தனது தகப்பனார் கைகளில் சிக்கி விஷயம் படுமோசமாகி விட்டதாம் சுருக்கமாகச் சொன்னால், சுற்றிவளைத்து என்னென்னமோ எல்லாம் எழுதிக் கடைசியில், என்னை இனிமேல் தனக்குக் கடிதமே எழுதவேண்டாமென்றும், ஆண்டவன் விரும்பம் இருந்தால் எப்பொழுதாவது ஒருநாள் மீண்டும் சந்திக்கலாமென்றும் எழுதியிருந்தாள்.

எவ்வளவோ மனக் குமுறல்களுடன் அன்றைக்கு அறுந்தது அறுந்ததுதான் ஆண்டவன் விருப்பப்படி இன்று நாகையாவை நடுவே வைத்து இந்த நடுத்தெருவில் மீண்டும் சந்தித்திருக்கிறோம்!

★ ★ ★

''என்ன மச்சான் மூன்று வருடத்துக்குள் ஆள் நல்லாய்க் கேட்டுப்போனாய்! கலியாணம் முடித்துவிட்டாய் என்று கேள்வி. அதனால்தான் இப்படியா? ......... உன்னைப் பார்த்தால் மச்சான் எனக்குப் பயமாயிருக்குது!'' என்றான், நண்பன் நாகையா.

மனத்துக்குள் வீசிய பெரும் புயலை ஒரு அசட்டுச் புன்சிரிப்பினால் போர்த்துமூடி மறைத்துக் கொண்டு'' அப்படி ஒன்றுமில்லை... போனகிழமை மூன்று நாலு நாள்க் காய்ச்சலில் கிடந்தனான். அதுதான் கொஞ்சம் வாட்டம்...... மற்றப்படி ஒன்றுமில்லை.... அது சரி, எப்போ நீ கொழும்பிற்குப் போறாய்?'' என்றேன்.

''நாளையோடு எனக்கு லீவு முடியுது. அன்றைக்கே போறன். போய்த்தான் வீடுகிடு பார்க்கவேணும், பிறகுதான் மனுஷியைக் கூட்டிக்கொண்டு போவேன் அது போகட்டும்... கலியாணத்துக்குத் தான் வரவில்லை, நாளைக்கு ஒருக்கா அந்தப் பக்கம் வாவன்... நல்லூரில்தான் இருக்கிறோம்!''

'ஓமோம்; கட்டாயம் வருகிறேன்''

அடுத்தநாள் போகவில்லை, அதற்கு அடுத்தநாளும் எனக்குப் போக வசதி ஏற்படவில்லை.

'எப்படிப் போவது? அங்கே போய் பொன்மலருக்கும் நாகையாவிற்கும் முன்னால் எப்படிச் சாதாரணமாக முகத்தைவைத்திருப்பது?'

நான் அங்கே போகாவிட்டாலும் இந்த இரண்டொரு நாளும் என்மனம் அடிக்கடி அங்கே போய் வந்துகொண்டுதானிருந்தது.

பொன்மலரைப் போய்ப் பார்க்கவேண்டும்; அவள் எப்படி இருக்கிறாள், எப்படி இருந்தாள், அவளுடைய மனநிலை என்ன என் பனவற்றை எல்லாம் அறியவேண்டும் என்ற ஒரு நீங்காத ஆசை என் மனத்துள் கொட்டும் புழுவாகத் தோன்றிக் குடைந்தெடுத்தது. ஆனால் நாகையா என்ற மந்திரம் நினைவுக்கு வந்ததும் அந்தக் கொட்டும் புழுக்குடைச்சல் ஊரும் புழுவாகி மெல்ல மெல்ல நெளியத் துவங்கிவிடும்.

இப்படி இரண்டு நாட்களும் கழிந்தபின்—

'நாகையா கொழும்பிற்குப் போயிருப்பான்' என்ற நம்பிக்கையான ஆதாரத்தில் நாகையா மந்திரம் வலிவிழுந்து போக, மனப் பிசாசு என்னை அந்த வீட்டிற்கு இழுத்துக்கொண்டு போயிற்று.

நான் படலையைத் திறந்துகொண்டு உள்ளே போனபோது அந்தப் படலை போட்ட 'கிறீச்' சிட்ட சத்தத்தைக் கேட்டுவிட்டு, வீட்டுமுன் கதவோரம் வந்து எட்டிப் பார்த்துவிட்டு, மறைந்தவள் பொன்மலர்தான்! ஆனால் படபடக்கும் நெஞ்சுச் சுமையோடு நான் முன்னேறி, விருந்தையில் ஏறி, அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து ஐந்தாறு யுகங்களாகிவிட்டபோதும், இதுவரை எவருமே வந்து 'என்னது? ஏன், யாரது?' என்று ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லையே!

தர்மசங்கடமான நிலை, எனக்கு!

'ஏன் வந்தேன்?' என்று என்னையே நான் கடிந்துகொண்டேன்' ஒருவேளை உள்ளே நாகையாவே இருக்கிறானோ? அவனிடம் இவள் 'ஏதாவது' என்னைப் பற்றிச் சொல்லிவிட்டாளோ?'...... ஆனால் பகுத்தறிவோடு சிந்தித்துப் பார்க்கும்போது அப்படி ஒன்றும் நடந்திராது என்று மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டேன்.

'கோழை; கோழை...... சீ, வெறும் கோழை!'

மூச்சை ஒரு தடவை இழுத்து, தைரியத்தை நெஞ்சில் வருவித்துக்கொண்டு, "நாகையா!" என்று மெதுவாகக் குரல் கொடுத்தேன். எனக்கே எனது குரல் சரியாகக் கேட்கவில்லை. தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு மீண்டும் ''நாகையா!' என்று கூப்பிட்டேன் இந்தத் தடவை கரகரத்த குரலும் அதில் இழைந்த பரபரப்பும் பதறலும் என் காதுக்கே தெளிவாகக் கேட்டன.

உள்ளே சரசரக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். பொன்மலர்தான்!

'ஆவ்! இந்தப் பொன்மலர் இப்ப எப்படிப்பட்ட அழகியாக மாறிவிட்டாள்!'

பொன்மலர் கதவடிக்கு வந்து கதவில் ஒரு கரத்தைப் பிடித்துக் கொண்டு உட்புறமாக நின்றவள், "நீங்கள் ஏன் வந்தீர்கள்?' என்று சட்டென்று கேட்டாள்.

நான் என்றுமே எதிர்பார்த்திராத கேள்வி! என்ன சொல்வதென்றே புரியவில்லை. தட்டுத் தடுமாறிப்போய் அவளேயே பார்த்துக் கொண்டிருந்தேன். என் உதடுகள் என்வசமிழந்து நெளிவதை உணர்ந்தேன் பொன்மலர் என்னைப் பார்க்காமல் எங்கேயோ பார்வையை ஓடவிட்டிருந்தாள்.

எனக்குள் முட்டாள் தைரியம் ஒன்று பிறந்தது. 'பொன்; உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்! பார்க்க ஆசை இருக்காதா? அந்த இரண்டு வருஷமில்லை, இந்தப் பிறப்பில் எப்படித்தான், எப்போதான் மறக்கமுடியும், அதை?"

ஒரு நிமிஷம் அவள் மௌனமாக நின்றாள். சுவரிலுள்ள மணிக்கூடு 'டிக்...டிக்' என்று அடிக்கும் ஓசையுடன் என் நெஞ்சமும் அடித்தது. பொன்மலர் எதையோ தன் மனத்திற்குள் சேகரித்துக் குவிக்கிறாள் போலத் தோன்றியது பிறகு கணீரென்ற உறுதியான குரலில் அவள் சொன்னாள்:

"நான் கேக்கிறேன். எதுக்காக நீங்கள் இங்கே வந்தனீங்கள்? ஏன் வரவேணும்? பழைய உறவை இனிமேலும் புதுப்பிக்கலாம் என்ற எண்ணமா? அது இப்போதல்ல நீங்கள் வவுனியாவை விட்டுப்போன ஆறுமாதத்தின் பின் அறுந்துபோய் விட்டது......உங்களை நான் அப்போது விரும்பிக் காதலித்தது உண்மைதான். உங்களை மட்டுமல்ல, நீங்கள் போனபின் ஆறு மாதங்கள் நான் இன்னொருவரையும் நேசித்தது உண்மை ஆனால் இப்போது அதை நினைத்தால் அது ஒரு சிறுபிள்ளை விளையாட்டு. உங்களையோ அல்லது அந்த வாலிபனையோ நான் திருமணம் செய்திருந்தால் ஒருவேளை அந்தக் காதலுக்கு ஒரு மதிப்பு, ஒரு புனிதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இன்றைய நிலையில் எனக்கு அதெல்லாம் ஒரு கானல் நீராகவே மனதில் படுகிறது. அவற்றின் ஒரு தூசிகூட என்மனதில் இல்லாமல் துடைத்துச் சுத்தப்படுத்தி விட்டேன். உங்களது நண்பரை நான் காதலித்துக் கலியாணம் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவரைக் கலியாணம் செய்தபின்னர்தான் தெரிந்துகொண்டேன். அன்றே என் ஆத்மா அவருக்குச் சமர்ப்பணமாகி விட்டது. என்று எனது கழுத்தில் அவர் தாலியைக் கட்டினாரோ அன்றே நான் அவரது சொத்தாகி விட்டேன்.... இது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். இப்போது சொல்லுங்கள். ஏன் வந்தீர்கள்?"

நான் பேசவில்லை. வெறுமையாய். இயக்கமற்றவனாய், மூச்சற்ற சடலமாக நான் உட்கார்ந்திருந்தேன்.

சுயஉணர்வு பெற்றதும் கதவுப் பக்கம் பார்த்தேன்.

அவள் அங்கே இல்லை!

அவள் அங்கே இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவள் என்றுமே என் இதயத்தில் கொலுவிருப்பாள். முன்னர்போல அழகுப் பொம்மையாக அல்ல, ஒரு பண்பாட்டின் திருஉருவமாகப் பொன் மலர் என்றும் என் உள்ளத்தில் இருந்தே தீருவாள்!

---




## கடமையின் எல்லை — ஒரு விமர்சனம்

தென்னகத்துப் பட முதலாளிகள் ஈழத்தை நிரந்தர வர்த்தகச் சந்தையாக மாற்றியுள்ளனர். இதை எதிர்த்து **ஷேக்ஸ்பியரின்** ஹாம்லெட்டை தமிழ்ப் பாணியில் தயாரித்து ஓரளவு வெற்றியும்பெற்றுள்ள காலஞ்சென்ற வேதநாயகம் அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். இருப்பினும் ஈழத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சமூகக் கதையைப் படமாகத் தயாரித்திருந்தால் இன்னும் சிறப்பாக வெற்றி பெற்றிருப்பார் அவர்.

இயற்கைக் காட்சிகளும், குதிரை ஓட்டமும், பாடல்களும் மெச்சும்படியாக அமைந்துள்ளன. ஒலிப்பதிவும் கமராவைக் கையாண்ட விதமும் பாராட்டுக்குரியது. ஆனால்நடிகர்களிடம் மேடைத் தாக்கம் நிறையக் காணப்படுகின்றது. ஆரம்பக் கட்டத்தை மனதில் பதியவைத்துப் பார்த்தால் கடமையின் எல்லை பெரும் வெற்றி என்றே கூறலாம்.

இதைத் தொடர்ந்து இங்கு படம் தயாரிக்கவும், அதை வளர்க்கவும், அந்நியர்களிடம் அடகு வைக்கப்பட்டிருக்கும் நமது கலை இலக்கியங்களை விடுவித்து நமது நாடு தன்னிறைவு பெறச் செய்யவும் பொருள் வசதி படைத்தோரும் கலையார்வம் மிக்கோரும் துணிந்து முன்வரவேண்டும்.

நிச்சயம் நமதுநாடு அவர்களைக் கைவிடாது.

# மனமே நீ அழு

அவன் எழுதிக்கொண்டிருக்கிறான். அவனுக்கு எழுத்து எத்தனை நண்பர்களை, எதிரிகளைத் தருகின்றது என்று அவன் கணக்குப் பார்ப்பதில்லை. எது மக்களை வாழ வைக்கும் என்பதைச் சிந்தித்து, அதைத் தன் மனச்சாட்சி ஏற்றுக் கொண்டால், அதை எழுத்து உருவில் அவன் வடிக்கத் தவறுவதில்லை. தன் சிருஷ்டிகள் விமர்சகர்களின் கையில் அகப்பட்டு அவஸ்தைப்படுவததக் கண்டு அவன் துன்பப்படுவதுமில்லை.

அவன் மற்றவர்கள் என்ன என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புவதில்லை. தான் மற்றவர்களுக்கு துன்பம் செய்யாது வாழவே விரும்புகிறான். அப்படியே வாழ்ந்து விடுவதாக அவன் எண்ணம். அது உண்மையும்கூட.

எழுத்தாளன் ஆன்மாக்களைப் படைக்கும் ஆண்டவனுக்குச் சரி. அவனுக்கு விருப்பு, வெறுப்பில்லை அவன் நிர்க்குணன்.

எழுத்தாளனும், மற்றவர்கள் விரும்புகிறார்களே என்று அதே பாணியில் திரும்பத் திரும்ப எழுதுவதுமில்லை 'விரும்பவில்லையே' என்று தன் மனச்சாட்சிக்கு சரி என்று பட்டதை எழுதத் தவறுவதுமில்லை.

அவனுடைய 'மன்னிப்பாரா?' என்றகதை சிறுபுயலை இளவட்டங்களினது மனதில் வீசச்செய்தது. அப்படி அவன் அதில் என்ன எழுதினான்? ஒருவன், செய்யும் தவறை அறிந்து அதைஉணர்ந்து தெளிந்து, அவனை வாழவிடுவதுதானே அழகு ...அதையே எழுதினான்.

அவன் சிரித்தான். தான் படைத்த இலட்சிய கதாநாயகனின் தன்மையை உணர்ந்து சிரித்தானோ அல்லது அப் பாத்திரத்தின் தன்மையை உணராது, விமர்சனம் செய்யப் புகுந்த உலகத்தை நினைத்துச் சிரித்தானோ?...யாருக்குத் தெரியும்?

இருந்தும், அவனுக்கு ஒரு ரசிகையைக் கொடுத்தது—அந்தச் சிறுகதை. அந்தக் கதை அவன் வாழ்விலே இன்னொரு கதையை ஏற்படுத்தப் போகின்றது என்பதை முன்பே அறிந்திருந்தால், அக் கதையை அவன் எழுதியிருப்பானோ என்னவோ?

தங்கையற்று, அதன் பாசத்தின் தன்மையை உணராது அதனை அனுபவவித்து வாழ விரும்பிய அவனுக்கு தங்கையானாள் அந்த ரசிகை அவள் பெயர் நிலா.

அன்பு காட்டும் மனைவி வேலியாகவும், பாசத்தை பிளிந்து கொடுக்கும் தங்கைப் பாசம் குளிர்ந்த நீராகவும் — அவன் 'எழுத்து' என்ற பயிரை வளர்க்க உதவியது.

அவள் சிரித்தால், உலகமே சிரிப்பதுபோன்ற பிரமை அவனுக்கு. அவளும் சிரித்துக் கொண்டே, அவன் குழந்தைத் தனம் நிரம்பிய முகத்தைப் பார்த்துக்கொண்டே இருப்பாள். மனதில் விகல்பமின்றி, அவர்கள் தங்களுக்கிடையே 'அண்ணா—தங்கை' என்ற உறவை வளர்த்து ஒருவருக்கு இன்னொருவர் ஆதரவாக இருந்தனர்.

சிரித்து வாழும் அவர்களைப் பார்த்து சிரித்து வரவேற்கத் தெரியாத உலகம், அவர்களுடைய நடையில் குறைகாண விரும்பி, குறைகண்டு, கேலிச் சிரிப்பு சிரித்தது. அவர்கள் இருவரும் தங்களைப்போல் மற்றவர்களையும் நினைத்தார்கள். ஆனால் அவர்களைச் சூழ்த்திருந்த புறஉலகம், அவர்களைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக, பலதையும் பேசினர்.

கட்டிலில் படுத்த படுக்கையாகக் கிடக்கும் மனைவி 'மலரின்' நோயைத் தீர்க்த போராடிக் கொண்டிருக்கும் அவனுக்கு வேறு புற உலகச் சிந்தனையே இல்லை.

அவன் இரவு பகலாக எழுதிக் குவித்து, குவித்ததை பத்திரிகாலயத்தில் கொடுத்து, அதனால் கிடைத்கும் பிச்சைக் காசை, பொற்காசாக ஏற்று அதைத், தன் மனைவிக்கு மருந்தாக மாற்றிக் கொண்டிருந்தான்.

அவனுடைய அந்த முயற்சியை வீண்முயற்சியாக கருதி, தன் கணவனுக்காக கண் கலங்கினாள், அவனுடைய மனைவி, மலர்.

அவனைப்பற்றி, அவன் மனைவி மலருக்கல்லவா தெரியும்! மலரின் குடும்ப வாழ்விற்காகப் பரிதாபப்படுவது போன்று அவனையும் நிலாவையும் சேர்த்து, கதைத்துச் சூள் கொண்டோடினர் பலர்.

அதைக் கேட்கும்தோறும் மலருக்கு, அந்த நோயிலும் ஒரு சிரிப்பு வரும்.

''...எனக்கல்லவா என் கணவனைப் பற்றித் தெரியும்? எனக்கில்லாத அக்கறை பிறருக்கு ஏன்? இந்தச் சூள் கொட்டும் பெண்களுக்கும், அந்தப் பெண்களின் 'சங்கரி'களான ஆண்களுக்குதங்களையும் மற்றவர்களையும்தெரியாது...பாவம்' என்று எண்ணியவாறு, எண்ணி

யதை மனத்திற்குள் அடைத்து வைத்து, ஒரு சிறு வேதனைப் புன்னகையை, நேர்முகமாகச் சொல்லும் அந்தச் சிலருக்கு விடையாகக் கொடுப்பாள், அவள்.

உண்மையை உணர்ந்து, சந்தர்ப்ப சூழ்நிலையின் தன்மையை அறிந்து, தெளிந்து, வாழ்வின் வழியை வகுக்கும் அவளைப் 'பேதைப் பெண்' என்று எண்ணி கழிவிரக்கம் காட்டினர் சிலர்.

அந்தப் பாயும் படுக்கையும் அவளைச் சுமக்க விரும்பாதது போல, அடிக்கடி 'கிறீச்! கிறீச்!' என்ற அவல ஒலியை எழுப்பும் அந்த ஒலியைச் சுட்டிக்காட்டி, தன் வாழ்வின் காலம் சுருங்குகின்றது' என்று மறைமுகமாகக் கூறுவாள் மலர்.

''...மலர்! உன்னைப் பார்ப்பவர்கள் எலும்புக்கூடு என்று சொல்லுவர். அவர்கள் பார்ப்பது உன் வெளித்தோற்றத்தை. அந்தத் தோற்றத்துக்குள்ளே இருந்து, விரிந்து சுருக்கும் இதயத்தின் தன்மையை அறிய அவர்களுக்கு இதயமில்லை என் வரையில் நீ எலும்புக் கூடல்ல. அன்று உன்னை எப்படிக் கண்டேனோ அதேபோன்று இன்றும் உன்னைக் காண்கின்றேன்" என்று சொல்லியவாறு, சதையற்ற எலும்பு பிட்டுக்கொண்டிருக்கும் முகத்தை கனிவாகத் தடவிக்கொடுத்தான்.

அணையப் போகும் விளக்கின் கடைசிச் சுடரொளி போல அவள் முகத்திலே மந்தகாசத்தை ஏற்படுத்தியது—அவனுடைய அன்பான வருடல்.

''...இந்த நோயின் கொடுமையிலும் நீ என்னைப் பார்த்துச் சிரிக்கும்பொழுது என் சிந்தையை நீ கவர்கின்றாய் என்றால் அன்று உன்னைப் புதுமணப் பெண்ணாக, பூத்துக் குலுங்கும் பூங்காவாக கண்டபொழுது...''

அவன் பேசிக்கொண்டே சென்றான். அவன் பேச்சு அவளுடைய மனதைப் புளகாங்கிதம் அடையச் செய்து நாணத்தைக் கொடுத்தது.

அவள் மெதுவாகச் சிரித்து கடைக் கண்களினால் அவனைப் பார்த்தாள்.

''...நீ உடலால் அழியலாம். உலகத்திற்கு நீ இறந்தவளாகக் கருதப்படலாம். என் வகையில், என் வாழ்க்கையை மாத்திரமல்ல —என் எழுத்துலகத்தையே மலரச் செய்தவள், நீ...''

''... அப்படி யென்றால் ...'' என்று மலரின் தொண்டையில் இருந்து சத்தம் தெளிவற்று, கரகரத்து வந்தது.

''...மலர்! என்றும் என் மனதில் இருப்பதை உனக்கு நான் ஒழிக்கவோ, மறைக்கவோ இல்லை மனதில் இருப்பதை மறைத்து,

போலிவேடம் போடுவதை என்றுமே நான் விரும்புவதில்லை... நீ மலரச் செய்தவள். அதற்கு மணமூட்டியவள், என் தங்கை நிலா"

மலரிடத்தில் மௌனம்.

ஒரே ஆழ்ந்த அமைதி...

ஒருசில விஞடிகளுக்குப்பின்—

அவன் மலரைப் பார்த்தான். மலரும் அவனைப் பார்த்தாள். அவைகள் பேசின. இதழ்கள் விரிந்தன. முல்லைப் பூக்கள் சிதறின.

ஒருவரை இன்னொருவர் அறிந்து, தெளிந்த உணர்வு அங்கே ஏற்பட்டது.

''...அத்தான்! அன்று ... அவள் உங்கள் காலைத் தொட்டுப் பூசித்துவிட்டு சென்றதை தற்செயலாகக் கண்டேன். அந்த நிகழ்ச்சியை என் வாழ்நாளில் என்றுமே என்னுல் மறக்க முடியாது. ம்!... அவளுக்குத்தான் உங்கள்மீது எவ்வளவு அன்பு! அவள்மீது எனக்குச் சரியான பொருமை...'' என்று சொல்லி விட்டு, மலர் அவனைக் கடைக் கண்ணினுல் நோக்கினுள்.

''...உனக்கா?'' – அவனுடைய அந்தக் கேள்வியில் எத்தனையோ ஆயிரம் கேள்விகள்!

"என்ன அத்தான்! திகைக்கின்றீர்கள்? பெண்களுடன் கூடப் பிறந்த சொத்து பொருமை. அதிலும் தன் கணவன்மீது இன்னெருத்தி அன்பு வைக்கின்ருள் என்ருல்...''

அவன் அவளைப் பார்த்தான். அந்தப் பார்வையிலே ஒன்றும் புரியாத தன்மை.

''...நிலா உங்கள்மீது வைத்திருக்கும் அளவு அன்பு என்னுல் உங்கள்மீது வைக்கமுடியவில்லையே என்ற பொருமைதான். சீ! எனக்கு இரண்டு இருதயங்கள் இருந்திருந்திருந்தால்......''அவள் சொல்லவந்ததைச் சொல்லிமுடிக்காது, அவனைப் பார்த்தாள்.

''அத்தான் என் பொருமையினுல் யாருக்கும் துன்பமில்லை. ஏன் உங்களுக்கும்கூட. இன்பமும் துன்பமும் சமநிலையில் இருத்தல் வேண்டும். அளவுக்கு மிஞ்சினுல் எதுக்கும் அழிவுக்குத்தான் காரணம். உங்களைத் திருமணம் செய்ததின் பின்பு, நான் அளவற்ற இன்பவுணர்ச்சிக்கு ஆளாகினேன், அதனுல் போலும், எனக்கு இந்த இருதய நோய்—'

''மலர்!'' என்று மெதுவாகச் சொன்னுலும் அவன் பார்வையில் இருந்த கண்டிப்பைக் கண்டு அவள் மௌனியானுள்,

''ஆயிரம் வருடங்கள் மனத் துன்பத்துடன் வாழ்ந்து சீரழிவதிலும் பார்க்க, அரை விஞடிதானும் இருமனமும் ஒருமித்து வாழ்ந்தால், அதுதான் வாழ்வு... எனக்கென்ன குறை? அன்பைச் சிந்தும் மலர் ஒருபுறம் – பாசத்தைத் தரும் தங்கை நிலா இன்னெரு புறம் –''

''...நிலா என்றவுடன் எனக்கு ஒன்று நினைவிற்கு வருகின்றது. அன்று அவள் சொல்லியது ...'' என்று இடைமறித்துச் சொல்லிய மலர், சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்காது இடையில் நிறுத்தினுள்.

அவள் மனம் அன்றைய நிகழ்ச்சியை மனக்கண் முன்பு கொண்டு வந்தது. அன்று நிலா சொல்லியது...... அதன் பின்பு அவள் வரவில்லை, ஆனுல் அந்த நினைவு...

★ ★ ★

''...நான் உடலாலும் உள்ளத்தாலும் களங்கப்படாதவள் அண்ணு! என்று அன்புடன் அழைத்து, பழகிவந்த என்னை, வதந்திகள் பலபேசி, என்மனதில் சலனத்தை ஏற்படுத்தி, காதலை வளர்த்தது, இன்று புத்திபுகட்ட முன்வரும் அதே உலகந்தான். என் மனதிலே எவருக்குமே நான் இடம் கொடுத்தவளல்ல ... சந்தர்ப்ப சூழ்நிலையினுல் கொடுத்தது, உங்களுக்கே தெரியாது நீங்கள்தான் அதற்கும் காரணம், இன்று புறம் கூறித் திரியும் இதே உலகந்தான் என் உடல் களங்கப்படவில்லை. இருந்தும் களங்கப்பட்டு விட்டதாக கதையைக் கட்டியதும் இதே உலகந்தான். என் அன்புக்குரியவரினுல் உடலாலும் உள்ளத்தாலும் தீண்டப்படாமலேயே, இந்த பாவஉடலை, யாரும் தீண்டுவதை நான் விரும்பவில்லை. உங்கள் மனைவியின் மாண்பிற்கு முன்பு நான் ஒரு துரும்பு. நான் நினைப்பது தவறில்லையாயின், மறுபிறப்பிலாயினும் என் கனவுகள் பலிக்கட்டும்.

★ ★ ★

நினைவுச் சுழலில் நிலா கூறிய வார்த்தைகளின் நினைவிலிருந்து அவள் மீண்டாள்.

மலர் அழுது கொண்டிருக்கின்ருள்

''... அத்தான் எங்கள் மனம் அழவேண்டும். மனம் பொல்லாத குரங்கு. அன்பை வைக்கப் கூடாத இடத்தில் அன்பை வைக்கும்... அந்த அன்பின் தன்மையை புனிதமாக்க தன்னைத் தானே சித்திரவதைக் குள்ளாக்கும்...'' என்று சொல்லியவாறு அழுதாள், மலர்.

' மலர், இது என்ன வேலை? நீ கவலைப்படுவது, உன் உடலுக்கே கூடாது அப்படியிருக்க...'' பேசிக்கொண்டே, அவளைத் தேற்றினுன்.

அங்கே, மலர் இல்லை.

மலரின் எலும்புக்கூடுதான் மிகுதியாகக் கிடந்தது.

அவளுக்காக — மலருக்காக அழ இருப்பது அவனும், அவன் தங்கை நிலாவும்தான். நிலாவும் போன இடம் அவனுக்கு தெரியாது.

இன்னும் சில விநாடிகள் சென்ருல், கண்ணீர்த் துளிகள் சிந்த, அழும் உலகம் கூடிவிடும்.

வந்து அழுபவர்கள், மலரின் பிரிவைத் தாங்க முடியாமலா அழ வருகின்ருர்கள்?...

சம்பிராயத்திற்காக அவள் வீட்டுத் தாம்பூலத்தை தரித்து, அவள் வீட்டை அசுத்தமாக்கி, அவள் பெயராலேயே, தங்கள் தங்கள் கவலையைத் தீர்க்க, அழ விரைவில் வரப்போகிருர்கள்!

அவளுக்காக அவன் அழுவானு? — அல்லது அவர்களுக்காகவா?

# இலட்சுமி பவான்

உரிமையாளர்: வே. சிவகுரு

சுகாதார முறைப்படியும்

பலவருட அனுபவத்தைக் கொண்டும்

**சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட**

- **சிற்றுண்டிகள்**
- **உணவு வகைகள்**

இங்கே தினசரி பெற்றுக் கொள்ளலாம்

**ஒருதடவை விஜயம் செய்யுங்கள்**

## இலட்சுமி பவான்

சைவ ஹோட்டல்

சுருவில் வீதி, **ஊர்காவற்றுறை.**

---

# ROSARY INDUSTRIES

கண்கவர் வண்ணத்தில் கைத்திறனுல் உருவாக்கப்பட்ட

**கைத்தறிச் சேலைகள்**

**சாரங்கள், துவாய்கள்**

முதலியன இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

★ நவீன அமைப்பு

★ நீண்டகாலப் பாவிப்பு

★ விலை சகாயம்

## ரோசறி இன்டஸ்றீஸ்

பண்ணை வீதி, நாரந்தனை, **ஊர்காவற்றுறை.**

# வசந்தாபேக்கரி அன் குறோசறிஸ்

உரிமையாளர்: S. R. இராசதுரை

சுவையான

★ கேக்குகள்

★ பிஸ்கட் வகைகள்

★ அச்சுப் பாண்

★ தவிட்டுப் பாண்

தினசரி பெற்றுக்கொள்ளலாம்

ஓடருக்கும் செய்து கொடுக்கப்படும்

வசந்தாபேக்கரி அன் குறோசறிஸ்

பிரதான வீதி, — ஊர்காவற்றுறை.

# திருமண வைபவங்களுக்கும்

## திருவிழாக்களுக்கும்

மற்றும்

மங்களகரமான நிகழ்ச்சிகளுக்கும்

ஞாபகம் வைத்திருங்கள்

# வி. எம். வடிவேலு

## மேளசெற்

வண்ணான் புலம், வேலணை மேற்கு,

வேலணை.

# பழகு தமிழ்ப் பாட்டு

பாட்டு வந்தது
பாடி நின்றனன்!
கேட்ட அங்குளோர்
கிட்ட வந்தனர்.

அண்டி நின்றிடும்
ஆள் மிகுந்தனர்
மண்டை வீங்கிட
மமதை கொண்டனன்!

பண்டு கற்றநூற்
பண்டிதத் தமிழ்
கொண்டு பாட்டுக்கள்
கூறி நின்றனன்.

சூழ நின்றவர்
துய்த்து நின்றவர்
வாழை நீரென
வழுகி ஓடினர்!

பிழை உணர்ந்தனன்!
பின்பு முன்பு போல்
பழகு மென்தமிழ்
பாடி நின்றனன்!

அங்கு வந்தவர்
அருகில் வந்தனர்!
"தங்கம்" என்றனர்,
தழுவி நின்றனர்!

ச. வே. பஞ்சாட்சரம்

கார்த்திகேசு சிவத்தம்பி

# மக்கள் இலக்கியம் — சில குறிப்புகள்

உருவம், பொருள், பணி, காலம் முதலியனவற்றை அடியாகக் கொண்டு இலக்கியத்திற்குப் பெயர் சூட்டுதல் சர்வதேச இலக்கிய மரபு.

''மக்கள் இலக்கியம்'' பணி பற்றியும், பண்புபற்றியும் வந்த பெயர்.

இலக்கியம் தோன்றியகாலம் முதல் இன்றுவரை இலக்கியம் மக்கள் சார்பானதாகவே இருக்க, அதனைக் கூறுபடுத்திக்கூற வேண்டுமா என்பது அறியப்படவேண்டியதாகின்றது.

முதலில் மக்கள் என்பதற்கான வரைவிலக்கணம் அவசியம். மக்கள் என்பது சமுதாயத்தில் வாழ்கின்ற சகலமக்களையும் குறித்து நிற்பது. ஒருபுலவன் அல்லது ஆசிரியன் கூறுகின்ற அனுபவத்தை விளங்கிக் கொள்ளத் தக்க பருவத்தினர் யாவரையும் இச்சொல் குறிக்கும். எனவே மக்கள் இலக்கியம் என்பது சமுதாயத்தில் வாழும் மக்களின் பெருந்தொகையானோரைக் குறிக்கும்.

இலக்கியம் மக்கள் பற்றிக் குறிப்பிடுவது என்பதில் எத்தகைய ஐயப்பாடும் இருக்க முடியாது. மனித உணர்ச்சிகளே அதன் நிலைக்களன். இலக்கியம் கூறும் எல்லாப்பொருளும் மனித அறிவு, மனித உணர்ச்சி எனும் வட்டத்துக்குட்பட்டதே.

இவ்வாறு கூறப்படும் மனித அறிவும், மனித உணர்வும் மனிதர்கள் யாவருக்கும் விளங்கக்கூடியதே என்பது தவறாகும். அறிவுபற்றிக் கூறுவதை விளங்கிக் கொள்வதில் சமத்துவம் இருக்க முடியாது. உணர்ச்சி பற்றிக் கூறுவதையும் கூறும் முறையினால் விளங்கிக் கொள்வது கடினமாகும்.

இலக்கியம் என்று கூறிக் கொள்ளும்பொழுது சிறப்பாக ஆற்றல் இலக்கியத்தையே குறிக்கின்றோம் என்பது உலகப் பொதுவான உண்மை.

எனவே மக்கள் வாழ்வினைக் களமாகக் கொண்டு எழுகின்ற இலக்கியம், மக்களால் விளங்கப்படல்வேண்டும் எனும் தேவையேற்படுகின்றது. இத் தேவை

முக்கியமானது. ஆனால் அதனைக் கூறுகின்ற முறையில் ஏற்படுகின்ற கட்டுப்பாடுகளினால் அது பூரணமாக விளங்காது போய் விடுதலும் உண்டு.

இலக்கிய வரலாற்றைப்பார்க்கும்பொழுது இலக்கியம், வாய்மொழிநிலையிற் பயிலப்பட்டது. பயிலப்படுவது என்பதும்எழுத்து வழக்கு நிலையிற் பயிலப்படுவது என்பதும் தெரிய வருகின்றது. மனித சமுதாயத்தின் பூர்வீக நிலையில் இலக்கியம் வாய்மொழி நிலையிலேயே பயிலப்பட்டது. பொருளாதார அபிவிருத்தியற்ற பூர்வீக இனங்களிடையே இன்றும் அந்நிலை காணப்படுகின்றது. தமிழிலே உள்ள பூர்வீக இலக்கியங்களும் அத்தன்மையானதே என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. கலாநிதி க. கைலாசபதியின் ஆராய்ச்சி முடிபுகள் தமிழ் இலக்கியத்துக்கும் இவ் வுண்மைகள் பொருந்துபவையே என்பதைக் காட்டுகின்றன. அப்பூர்வீக நிலையில் இலக்கியத்துக்கும் மக்களுக்கும் நேரடித் தொடர்பிருந்தது. மக்கள் முன்னிலையில் பாடப்பட்டது இலக்கியம்.

ஆனால் காலம்செல்ல, எழுத்துத் தோன்றிற்று. எழுத்துத் தோன்றவே இலக்கியம் எழுத்துருவிற் பொறிக்கப்படலாயிற்று. எழுத்துருவம் எல்லோராலும் விளங்கக் கூடியதன்று. எழுத்து வளர்ச்சி சமுதாயத்தில் ஏற்பட்ட வேறு எத்தனையோ வளர்ச்சிகளின் விளைபொருளாகும். வணிகம், அரசு என்பன முக்கியமானவை. எழுத்து, அறிவு என்பன முக்கியமானவை. எழுத்து, அறிவு சமுதாய ஆதிக்க சக்திகளுக்குக் கட்டுப்பட்டுக் கிடந்தது. எனவே மக்கட் பொருட்டாகிய இலக்கியம் மக்கள் யாவராலும் விளங்கப்படமுடியாத நிலையேற்பட்டது. எழுத்தை விளங்கிக் கொள்ளக்கூடியவர்கள் மாத்திரமே இலக்கியத்தை விளங்கிக் கொள்ளக்கூடிய தன்மை ஒருபுறம் தோன்றிற்று மறுபுறம் அவ்வெழுத்துருவ இலக்கியத்துக்கான கட்டுப்பாடுகளும் மரபுகளும் தோன்றின. இக்கட்டுப்பாடுகள் பொருளையும் கட்டுப்படுத்தின. இத்தகைய ஒருநிலை பேதப்பட்ட சமுதாயத்திலேதான் தோன்றும். எனவே எழுத்துருவ இலக்கியம் உயர்ந்தோர் நிலையிலேயே பயிலப்பட்டது. கீழ் நிலையிலிருந்தோர் — அதாவது ஆதிக்க சக்திகளைக் கட்டுப்படுத்தும் சக்தியற்றிருந்தோரே— பண்டைய வாய்மொழி இலக்கியத்தையே பேணிவந்தனர். இலக்கியம் மூலம் மக்களுடன் நேரடித் தொடர்புகொள்ள விரும்புவோர் காலத்துக்குக் காலம் வாய்மொழி இலக்கியமரபுகளைத் தம் உயர்நிலை இலக்கியங்களிலும் சேர்த்துக் கொண்டனர். தேவாரகாரர், பள்ளு, குறவஞ்சி ஆசிரியர் முதலியோர்க்கு இத் தேவையேற்பட்டது.

ஆனால் பல நூற்றுண்டுகட்குப்பின் சமுதாய ஆதிக்கம் பற்றிய கோட்பாட்டில் மாறுதல் உண்டாயிற்று. சமுதாய பேதமற்ற முறையில் மக்கள் யாவ

ரும் அரசியலாதிக்கம் உடையோராய் அமைதல்வேண்டும் என்ற குரல் கிளம்பிற்று. நிலமானிய முறையைநீக்கி முதலாளித்துவ முறையேற்பட்டது. பழைய சமுதாய வேறுபாடு அழிந்து சனநாயகத்தில் மக்கள் யாவருக்கும் கல்வி புகட்டப்பட்டது. வரலாற்றில் முதற்றடவையாகக் கல்வி பொதுஉடைமையாயிற்று. அதாவது எழுத்துருவத்தில் இலக்கியத்தை விளங்கிக் கொள்ளக்கூடியோர் தொகை திடீரெனப் பெருகிற்று.

உலகம் என்பது உயர்ந்தோர்க்கு மாத்திரமன்றி உள்ளவர் யாவர்க்குமே என்ற நிலை தோன்றிற்று. அச்சித்தாந்தத்தைத் தோற்றுவித்தவர்கள் அத்தகைய இலக்கியத்தின் அவசியத்தை வற்புறுத்தினுர்கள். மக்கள் இலக்கியம் வளரத் தொடங்கிற்று.

மக்கள் இலக்கியம் கருவிலேயே திருவுடையது. திருவுடையது என்பதை ஒத்துக்கொள்ளாதவர்களும்அது,இதுகால வரையிருந்த இலக்கிய நெறிகட்கு மாறுபட்டது என்பதை ஒத்துக்கொள்வர்.

புதிதாகத் தோன்றிய இவ்விலக்கியத்தைபழைய இலக்கியத்துடன் ஒப்பு நோக்கும்பொழுது இலக்கிய உருவம், உத்தி, போன்ற நெறிகளில் முந்தியது வேறுபட வேண்டியதாகின்றது. பொருளிலும் வேறுபாடு அவசியமே.

வரலாற்றில் இதுவரை யேற்பட்ட இலக்கிய மாற்றங்கள் யாவற்றுள்ளும் இது பெரியது, முன்பின் கண்டறியப்படாதது.

அதனுல் இதை விளங்காதவர்களும், தப்பாக விளங்குபவர்களும் பலர் இருக்கவே செய்வர்.

பெருந்தொகையான மக்கள் வாசகராவதைக் கண்டு, முதிர்ச்சியடையாத அவர்கள் சுவையுணர்வைத் தம் சுயவிருத்திக்குப் பயன் படுத்துபவர்களும் உளர். 'மக்கள் தினசரி'யாளர் இப்பிரிவினுரே.

பண்புச் செம்மையற்ற பலரால் இலக்கியம் பயிலப்படுவதால், இலக்கியத்தின் தரம் குறைந்து விட்டது என்போரும் உளர்.

மக்கள் இலக்கியம் புதியதோர் இலக்கியக் கோட்பாடு. அதனைச் செம்மையுற வளர்ப்பது அவ்விலக்கியக் கோட்பாட்டை நம்புபவரது கடன்.

''வில்லுக்கு வேந்தன் விஜயன்; விளங்குதமிழ்ச்
சொல்லுக்கு வேந்தனுர்? வேந்தனுர்! – நல்லதமி
ழெல்லாம் வழங்கி யிருந்தகன்றுர், இப்புவியில்
எல்லும் இரவாம் இனி''

– சிறுவைகிழார்

# சிவகடாட்சம் ஸ்டோர்ஸ்

சில்லறை — மொத்த

விற்பனையாளர்

நிதான விலை நிறைவான சேவை

# சிவகடாட்சம்

## ஸ்டோர்ஸ்

வேலணை.

கொழும்பு — ஊர்காவற்றுறை

போக்குவரத்துச் சேவை

ஏஜன்ட்.

விலையில் நிதானம்! சிறந்த சேவை!!

# அல்பிறட் ★ ஸ்டோர்ஸ்

சில்லறைச் சாமான்கள்

மருந்துச் சாமான்கள்

பெற்றுக்கொள்வதற்கு

## சிறந்த

இடம்

## அல்பிறட் ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: S. M. அல்பிறட் J. P.

பிரதான வீதி, — ஊர்காவற்றுறை.

# இராமலிங்கம்
## ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: K. S. இராமலிங்கம்

பலசரக்கு மளிகை

**ஊர்காவற்றுறை.**

GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS

**எங்களிடம்**

**பலசரக்குச் சாமான்கள், திறம் புகையிலை**

விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**கிளை:**

## R. P. N. RICE MILL

**CHAVAKACHCHERI**

# லெக்ஷ்மி பவான்

உரிமையாளர்: M. சோமசுந்தரம்

35, கஸ்தூரியார் வீதி, — **யாழ்ப்பாணம்.**

எங்களிடம்

சுகாதார முறைப்படி தயாரித்த

★ **தேநீர்**

★★ **காப்பி**

★★★ **சிற்றுண்டிகள்**

எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்

**குறித்த நேரத்தில் ஓடர்ருக்கு செய்து கொடுக்கப்படும்**

சுத்தமான முறையில்

காலை 10 மணிமுதல் இரவு 10 மணிவரைக்கும்

**மாமிச போசனம் கிடைக்கும்.**

இன்றைய ஆதரவாளர்களுக்கு எங்கள் நன்றி



யாழ்ப்பாணம் 60,கஸ்தூரியார் வீதியில் இருப்பவரும் மல்லிகை ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக்ஜீவா அவர்களால், யாழ்ப்பாணம் 319, கே.கே எஸ்,வீதியிலுள்ள நாமகள் அச்சகத்தில் அச்சிட்டுவெளியிடப்பட்டது

இயற்கை

அ

ழ

கை

எடுத்துக்காட்டும் முறையில்

அணியக் கூடிய

பிரேஸியர்கள் தான்

# வீனஸ் போம்

தயாரிப்புக்கள்

பல சைஸ்களிலும் பல நிறங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

விலை சகாயம்

**VENUS FORM**

யாழ்ப்பாணத்திலும் மற்றும் இலங்கையின் முக்கிய
நகரங்களிலுமுள்ள எல்லாக் கடைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

சு. கிருஷ்ணசாமி
பத்திரிகை, புத்தக
விற்பனையாளர்
யாழ்ப்பாணம்



# பட்டு உடைகளை

றைக்கிளீன் செய்வதிலும்
சாயம் போடுவதிலும்
மிகப்பெரிய ஸ்தாபனம்

SUNLIGHT DYERS & DRY CLEANERS

# சன்லைட்

டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்

பெரியகடை (ராணித்தியேட்டருக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

போன்: 474. தந்தி: றைக்கிளீன்.

---

எமது மற்றுமோர் ஸ்தாபனம்:

தங்கள்

## பெயின்ற் தேவைகளுக்கு

## எங்களை

## மறந்துவிடாதீர்கள்.

# சூரியப்பிரகாஸ் ஸ்டோர்ஸ்

பிரசித்திபெற்ற பெயின்ற் வியாபாரிகள்

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபோசி: 474. தந்தி: 'பெயின்ற்'